# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 26 வியாழக்கிழமை (12-10-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:252


### பல்வேறு முறைப்பாடுகளை அடுத்து

# தேர்தல் முடிவுகளை அறிவிப்பதை ஆணையாளர் இடைநிறுத்தினார்!

## கட்சிகளின் செயலாளர்களை இன்று நண்பகல் சந்திக்கிறார்

கொழும்பு,ஒக்ரோபர்12

**நேற்று முன்தினம் நடந்த பொதுத் தேர்தல் வாக்களிப்பின் போது யாழ். தேர்தல் மாவட்டம் உட்பட இலங்கையில் பரவலாகப் பல இடங்களில் முறைகேடுகள் இடம்பெற்றதாகத்தமக்குக் கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து பொதுத் தேர்தல் முடிவுகளை அறிவிப்பதை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா நேற்று மாலை திடீரென இடைநிறுத்தினார்.**

**இவ்விடயங்கள் குறித்து இறுதித் தீர்மானம் எடுப்பதற்கு முன்னர்,சகல கட்சிகளின் செயலாளர்களையும் இன்று நண்பகல் 11.30 மணிக்கு அவர் கொழும்பில் தமது அலுவலகத்தில் சந்திக்கின்றார்.**

தேர்தல் முடிவுகளை உத்தியோக பூர்வமாக அறிவிக்கும் நடவடிக்கையை இடைநிறுத்தி அவர் வெளியிட்ட அறிவிப்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்பட்டது.

"யாழ். தேர்தல் மாவட்டத்தில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. தெற்கில் கண்டி மாவட்டம் உட்பட 22 பிரதேசங்களில் மோசமான முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாக எனக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் குறித்து இறுதித் தீர்மானம் எடுக்க முன்னர் கட்சிகளின் செயலாளர்களின் கருத்துகளையும் செவிமடுக்க விரும்புகின்றேன். எனவே அவர்களை வியாழன் நண்பகல் 11.30 மணிக்கு என்னைச்சந்திக்க வருமாறு அழைப்பு விடுத்துள்ளேன்"- என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

யாழ். தேர்தல் மாவட்டத்தின் முடிவுகள் கொழும்பு தேர்தல் ஆணையாளர் அலுவலகத்துக்கு யாழ். தெரிவத்தாட்சி அலுவலரினால் உத்தி

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். தேர்தல் கள முடிவுகள்

## ஈ.பி.டி.பி - 4; த.வி. கூட்டணி - 3 காங்கிரஸ், ஐ.தே.க - தலா ஒன்று

யாழ்ப்பாணம்,ஒக்.12

யாழ்.மாவட்டத் தேர்தல் களத்தில் அதிக வாக்குகளைப் பெற்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த நான்கு பேர் எம்.பிக்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணிசார்பில் மூவரும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன சார்பில் தலா ஒவ்வொருவரும் யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவாகின்றனர்.

இக்கட்சிகளின் சார்பில் நாடாளுமன்றத்தில் அமரும் வாய்ப்பைப் பெறும் வேட்பாளர்கள் யார் என்பது சம்மந்தப்பட்ட கட்சிகளுக்கு அளிக்கப்பட்ட விருப்பு வாக்குகள் எண்ணப்பட்டதும் - பெரும்பாலும் இன்று - தெரியவரும்.

தீவகத்தில் அளிக்கப்பட்ட சுமார் 15 ஆயிரம் வாக்குகள் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐ.தே. கட்சி, புளொட், உட்பட ஈ.பி.டி.பி. தவிர்ந்த - ஏனைய கட்சிகள் கடும் ஆட்சேபம் தெரிவித்ததால் அது குறித்து சர்ச்சை எழுந்துள்ளது.

அங்கு தேர்தல் முறைகேடுகள் வகை தொகையின்றி நடந்ததாகவும் -

ஏனைய கட்சிகளின் வாக்களிப்பு முகவர்களை மிரட்டிக் கடத்தி அல்லது கடத்திவிட்டு அங்கு ஈ.பி.டி.பி. யினர் கள்ளவாக்குகள் அள்ளிப் போட்டதாகவும் அக்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன. எனினும் அந்தக் குற்றச்சாட்டுக்கள் கவனத்தில் எடுக்கப்படாமல் அந்தப்பகுதியில் கிடைத்த சுமார் 13 ஆயிரத்திற்கும்

(10ஆம் பக்கம் பார்க்க)

**உதயன் நேற்றைய தேர்தல் விசேட பதிப்பில் இடம்பெற்ற சில செய்திகளும் இன்றைய உதயனில் வெளியாகி உள்ளன.**

## ஈ.பி.டி.பி. கட்சியின் உதவியுடன் பொ.ஐ.மு. புதிய அரசு அமைக்கும்

### சுதந்திரக்கட்சிச் செயலர் அறிவிப்பு

கொழும்பு,ஒக்.12

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்(ஈ.பி.டி.பி.யின்) உதவியுடன் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மீண்டும் ஆட்சியமைக்கும் என்று முன்னணியின் பிரதான அங்கமான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான எஸ். பி.திஸநாயக்கா அறிவித்திருக்கின்றார்.

225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றுக்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் தேசிய பட்டியல் உறுப்பினர்கள் உட்பட 109 எம்.பிக்கள் தெரிவாகியுள்ளனர் என்றும் -

ஈ.பி.டி.பியின் ஐந்து எம்.பிக்களுடன் சேர்ந்து அறுதிப்பெரும்பான்மையுடன் பொ.ஐ.முன்னணி ஆட்சியமைக்கும் என்றும் -

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கட்டுப்பாட்டிலுள்ள அரச ஊடகங்கள் நேற்று மாலை தகவல் வெளியிட்டன.

ஐக்கிய தேசியக்கட்சிக்கு 90 இடங்களும், ஜே.வி.பிக்கு 10 இடங்களும், ஏனைய கட்சிகளுக்கு 11 இடங்களும் கிடைத்ததாகவும் அந்த ஊடகங்கள் தெரிவித்தன.

எனினும் தேர்தல் அலுவலகத்துக்குக் கிடைத்த எம்.பிக்கள் தெரிவு பற்றிய பெறுபேறாக 184 எம்.பிக்கள் பற்றியதாகவே இருந்தது. கண்டி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 12 எம்பிக்கள் பற்றிய விவரம் தெரியவரவில்லை. அத்தோடு அங்கு கட்சிகள் பெற்ற வாக்குகளின் விவரமும் தெளிவுபடுத்தப்படாததால் தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்ற அங்கத்துவத்தை பெறும் 29 எம்பிக்கள் எந்தக்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற விவரம் தெரியவரவில்லை.

வெளியே தெரியவந்த 184 முடிவுகளின் படி பொ.ஐ.மு. - 88 , ஐ.தே.க. -72, ஜே.வி.பி. - 08, தமிழர் விடுதலைக் கூட்டணி -05 , ஈ.பி.டி.பி. -04, ரெலோ - 03, தேசிய ஐக்கிய முன்னணி, - 02, ஈ.பி.டி.பி சார்பான உறுப்பினரின் சுயேச்சைக் குழு - 01, தமிழ்க்காங்கிரஸ் - 01 என்ற கணக்கில் எம்.பி பதவிகளைப் பெற்றுள்ளன.

(உ-5-10)

### செல்வராஜாவே 'அவுட்'!

## சொற்ப வாக்கு வித்தியாசத்தில் ஜோசப் எம்.பியாகத் தெரிவு

### முன்னர் வெளியான செய்தி தவறு



மட்டக்களப்பு,ஒக்.12

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினராக ஜோசப் பரராசசிங்கம் விருப்பு வாக்கில் சொற்ப வித்தியாசத்தில் - 847 வாக்குகளால் - வெற்றி பெற்றுள்ளார்.

விருப்பு வாக்கு எண்ணிக்கை நேற்று மாலை தெரிவத்தாட்சி அலுவலரால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது.

இதன்படி மட்டக்களப்பு மாவட்டத்திற்கு- தமிழர் விடுதலைக் கூட்டணியின் எம்பிக்களாக ஜோசப் பரராஜசிங்கம், நிமலன் சௌந்தரநாயகம் ஆகியோரும் - ஐக்கிய தேசியக்கட்சியின் எம்.பியாக அலிசாகீர் மௌலானாவும் -

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் எம்.பியாக எஸ்.கணேசமூர்த்தியும் -

தேசிய ஐக்கிய முன்னணி எம்பியாக மொகிதீன் அப்துல் காதரும் - தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

(10ஆம் பக்கம் பாக்க)

## எம்.பிக்கள் யார் என்பது இன்று தான் தெரியவரும்

யாழ்ப்பாணம்,ஒக்.12

யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள எம்.பிக்கள் யார், யார் என்பது பற்றிய தெளிவான நிலை இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஒவ்வொரு கட்சியிலும் வேட்பாளர்கள் பெற்ற விருப்புவாக்குகளை எண்ணும் பணி நேற்று ஓரளவு நடைபெற்ற நிலையில், இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் வி.ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராஜா, சிவமகாராஜா, ஆகியோரும் -

ஐ.தே.கட்சி சார்பில் தி.மகேஸ்வரனும் - (10ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் பிரதிநிதித்துவம் திருமலை இழந்தது!

சுமார் அரை நூற்றாண்டு கால நாடாளுமன்றச் சரித்திரத்தில் திருகோணமலை மாவட்டம் இம்முறை முதல் தடவையாக தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இழந்திருக்கின்றது.

அங்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மூன்று எம்.பி.பதவிகளையும் ஐ.தே.கட்சி ஓர் எம்.பி.பதவியையும் பெற்றுக்கொண்டுள்ளன.

தமிழ் வாக்காளர்களின் வாக்குகள் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., தமிழர்கள் சார்பான சுயேச்சைக் குழுக்கள் எனப் பல அணிகளில் சிதறிப் போக, மாவட்டத்தில் மூன்றாம் இடத்துக்கு வந்த தமிழர் விடுதலைக் கூட்டணிக்குக் கூட ஓர் எம்.பி ஆசனம் கிட்டும் வாய்ப்பு எட்டாக் கனியாகிப் போய்விட்டது.

மேலதிகமாக இன்னும் ஆயிரத்து 500 வாக்குகளைப் பெற்றிருந்தால் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஓர் ஆசனம் கிடைத்திருக்கக் கூடும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

திருமலையில் தமது பலத்தைப் பல தமிழ்க் கட்சிகளும் பரீட்சித்துப் பார்த்து, தமிழர் நலனை விற்றுவிட்டன என்று அங்குள்ள தமிழர்கள் பலரும் அதிருப்தி வெளியிட்டனர்.

## கட்சிகள் பல மண் கவ்வின! முக்கிய பிரமுகர்களும் 'அவுட்'!!

கொழும்பு,ஒக்.12.

நடைபெற்று முடிந்த தேர்தலில் கட்சிகள் பலவும் மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளன.முக்கிய தலைவர்கள் சிலரும் தமது தொகுதிகளைக் கோட்டை விட்டிருக்கின்றனர்.

தமிழ்க் கட்சிகளான ஈ.பி. ஆர்.எல்.எவ்.வின் வரதர் அணி, சுரேஸ் அணி, புளொட் ஆகிய அணிகள் இத்தேர்தலில் தோல்வியைச் சந்தித்துள்ளன.

சிஹல உறுமய,பூமி புத்ர,லலித் அணி,லிபரல் கட்சி, புதிய இடது

(10 ஆம்பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறி விட்டது

வண்ணமுத்து குணசேகரன் (குணா) என்பவருடைய பேர்ஸ் நகைக்கடை கொள் முதல் கணக்குத் துண்டுகள் தட்டாதெருச் சந்திக்கும் நல்லூருக்குமிடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் இல. 529 கஸ்தூரியார் வீதி, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை முன்பாக ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். T.P 3326
(79358)

ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய் என்னும் முகவரியைச் சேர்ந்த சுப்பிரமணியம் லோகதர்சன் என்பவரின் தேசிய அ. அட்டை, விசேட அடையாள அட்டை இலக்கம் (0905005670) மானிப்பாய் நாயகபாலன் புத்தகசாலைப் பகுதியில் 2-10-2000 அன்று தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்படி புத்தகசாலையில் ஒப்படைத்துதவவும். (சி/13354)

### படிவம்

தொழில் நுட்பக் கல்லூரிகளின் அனுமதிக்கான விண்ணப்பம் 2001 ஆம் ஆண்டு விற்பனையாகின்றது. படிவம் அளவு 13''X8'' விலை ரூபா 2 50 மொத்த வியாபாரிகளுக்கு கழிவு உண்டு. பாரதி 430, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-3081
(சி/13321)

### DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக்கழக நடை முறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும் (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/-) தொடர்பு: பாரதி 430, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 3081
(சி/12122)

### அபூர்வ ஜோதிடம்

சித்தர் ஏட்டு ஆய்வினால் தீராத நோய்தீர்த்தல் அதிர்ஷ்டத்தை நோக்கிய வாழ்வு அனைத்துக்கும் சிறந்த பலன் நேரம்: சனி, ஞாயிறு 8.30-5.00 இன்று (12-10-2000) வியாழன் முழுநேரமும் சந்திக்கலாம். ஆடியபாத வீதி, சரஸ்வதி மில் லேன், கொக்குவில் கிழக்கு. (79365)

### திருமண சேவை

எங்களிடம் எல்லா மதங்களிலும் மணமக்கள் உண்டு. புகைப்படம், சாதகத்துடன் எல்லா நாள்களிலும முக்கியமாக ஞாயிறு தினங்களில் தொடர்பு கொள்ளவும் துர்க்கா திருமண சேவை 178, நாவலர் வீதி, பிறவுண் றோட் சந்தி யாழ்ப்பாணம்.
(79367)

### அறை வாடகைக்கு

யாழ். நகரில் மேலும் இரண்டு அறைகள் வாடகைக்கு உண்டு பார்வையிடும் நேரம்: திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி 12 00 — 4 00 மணி வரை. ந விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். (79331)

### தேவை

பெற்றோரை இழந்த சைவச் சிறுவனைப் பராமரிக்க விரும்புகிறேன். ஆசாரமுடையவர் விரும்பத்தக்கது. தொடர்பு: தர்மகர்த்தா ஸ்ரீ ராகவேந்திர மிருத்திக்கா குரு சன்னிதானம், 159A, கோவில் வீதி, நல்லூர். (79346)

## வெள்ளைப் பிரம்பு தினம்

யாழ். லயன்ஸ் கழகம் 15 - 10 - 2000 ஞாயிற்றுக்கிழமை வண்ணை நாவலர் பாடசாலையில் வெள்ளைப் பிரம்பு தினத்தை கொண்டாட உள்ளது. கண்டார்வையற்றோர் சங்கத்தை கௌரவிக்கும் கூட்டமும் நடத்தப்படும். சகல யாழ். லயன்ஸ் கழக உறுப்பினர்களும் தவறாமல் சமுகமளிக்கவும்.

லயன் ஜெ. முத்துக்குமாரசாமி
தலைவர்

லயன் B R. ரஞ்சன்
காரியதரிசி

(79373)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## பழைய மாணவர் சங்கம்

## முழு நிலா நாள் கருத்தரங்கு ஒத்திவைப்பு

இன்று கல்லூரியில் நடைபெறவிருந்த — இந்த மாதத்துக்குரிய — முழு நிலா நாள் கருத்தரங்கு எதிர் வரும் 14-10-2000 சனிக்கிழமை மாலைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் நிகழும் கருத்தரங்கு பற்றிய விவரங்கள் பின்னர் உதயனில் விளம்பரப்படுத்தப்படும்

பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

(சி/13363)

யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை,
பருத்தித்துறை

## தரம் 6 அனுமதி - 2001

மேற்படி வகுப்புக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணபபப்படிவங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

முடிவு திகதி: 15 - 11 - 2000

— அதிபர்

(சி/13351)

## கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் நிகழ்ச்சிகள் யாவற்றிற்கும் உறுதுணையாக நின்று உதவிய யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலய அதிபர்

### ஐயாத்துரை துரைராசா அவர்கள்

அகால மரணமானதையிட்டு, நாம் ஆழ்ந்த துயரும் அதிர்ச்சியும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(79378) — சைவ பரிபாலன சபை

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 01 — 06 — 1932

மறைவு: 12 — 09 — 2000

### கந்தையா குணரத்தினம் B.Sc ,Dip. in Ed

(முன்னாள் அதிபர், நெல்லியடி ம. ம. வி.)

எங்கள் நல்லாசான், நல்வழிகாட்டி, மனிதருள் மாணிக்கம், அமரர் கந்தையா குணரத்தினம் அவர்கள் இலண்டனில் இறைபதமெய்திய செய்தி கேட்டு ஆறாத் துயரடைந்தோம்

அன்னாரின் 31 ஆம் நினைவு நாளில் அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சந்திரசேகரம்பிள்ளை,
குடும்பத்தினர்.

நவிண்டில்,
கரணவாய் மத்தி,
கரவெட்டி.

(79196)

## கண்ணீர்ப் பூக்கள்

### ஐயாத்துரை துரைராசா அவர்கள்

(அதிபர், யாழ். வண்ணை நாவலர் மகாவித்தியாலயம்)

09-10-2000 அன்று அகாலமரணமடைந்த செய்தி அறிந்து பழைய மாணவர் சமூகம் கண்ணீர் விட்டுக் கைபிசைந்து நிற்கின்றது அன்னாரின் பிரிவினால் துயரடைந்துள்ள அவர் தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யாழ் வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்
(79381)

## கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் செயலாளர்

செ. செல்வரத்தினம்

அவர்களின் அன்புத் தந்தையார்

### அமரர் இளையதம்பி செல்லையா

(தபால் ஊழியர்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், உறுப்பினர்கள்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
நலன்புரிச் சங்கம், நல்லூர் பிரதேச சபை.

(79383)

## மரண அறிவித்தல்கள்

### தம்பிப்பிள்ளை யேசுதாசன்

(உரிமையாளர் வேளாங்கன்னி ஸ்ரோர்ஸ்,
பாங்சால் வீதி, குருநகர்)

கரம்பனைப் பிறப்பிடமாகவும் ஆஸ்பத்திரி வீதி, யுவானியார் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை யேசுதாசன் 11 - 10 - 2000 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை- இக்னேசியாபபிள்ளையின் அன்பு மகனும் ஜெயராணியின் அன்புக் கணவரும் றுக்மன், லக்ஸ்மன் (லண்டன்), நிரோஜன் (பத்திரிசியார் கல்லூரி), டெஸ்மன் (ஜோண் பொஸ்கோ) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜோர்ஜின் (கனடா) சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்!
மனைவி

14/1, யுவானியார் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/13361)

### இளையதம்பி செல்லையா

(கோப்பாய் வடக்கு)

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இளையதம்பி செல்லையா (இளைப்பாறிய அலுவலகர் தபால்கந்தோர்) நேற்று (11-10-2000) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அழகம்மாவின் அன்புக் கணவரும், செல்வரத்தினம் (செயலாளர், நல்லூர் பிரதேச சபை) காலஞ்சென்ற நவரத்தினம் (ஆசிரியர், கரந்தன் இராமப்பிள்ளை வித்தியாலையம்), தவரத்தினம் (நீர்வேலி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்), செல்வமதி, இராசரத்தினம் (மின்சார சபை), ஜெயரத்தினம் (ஆசிரியர், ஊரெழு, கணேசா வித்தியாலயம்), இந்துமதி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஞானேஸ்வரி (ஆசிரியை புனிதமரியாள் வித்தியாலயம் யாழ்) மகேஸ்வரி (ஆசிரியை, கரந்தன் இராமப்பிள்ளை வித்தியாலயம்), தெய்வேந்திரராணி, தேய்வேந்திரம், நாகேஸ்வரி யோகேஸ்வரி, (ஆசிரியை, கோப்பாய் வடக்கு R C பாடசாலை) ஆகியோரின் மாமனும், கவிதா (யாழ். மருத்துவபீடம்), மந்தாகினி (உள்ளூராட்சி திணைக்களம்), ஜீவனா, சர்மிளி, மதுராந்தகா பிரமினா (யாழ் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), மோகனாம்பிகை (கடற்றொழில் திணைக்களம்), கபிலன், நவதாஸ், மோகனதாஸ் (ஜேர்மனி), அமரதாஸ் (யாழ். இந்துக் கல்லூரி மாணவன்), யசோதேவி (யாழ் பல்கலைக்கழகம், கலைப்பீடம்), காயத்திரி, ஞானேந்திரன், கிருசாந்தினி, சதீஸா (மாணவி, கோப்பாய் சரவணபவானந்தா) பவித்திரா, ராஜ்திலக் (மாணவி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), ஜெயக்குமார் ஆகியோரின் பேரனும் கோபிசாந், துஷாயினி ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-10-2000) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் ஈழங்காடு மயானத்திற்கு 12 00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்

இ. தெய்வேந்திரம் (மருமகன்)

இலகடி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(79390)

# தொகுதி வாரியான தேர்தல் முடிவுகள்

## காலி மாவட்டம்

### பலப்பிட்டிய
☆பொ.ஐ.மு. - 15,719
☆ஐ.தே.க. - 14,194
☆ஜே.வி.பி - 2,478

### கரந்தெனிய
☆பொ.ஐ.மு. - 21,035
☆ஐ.தே.க. - 17,491
☆ஜே.வி.பி - 4,334
☆புதிய இடதுசாரி.மு - 249
☆சிஹல உறுமய - 247

### கினிதும
☆பொ.ஐ.மு. - 34,278
☆ஐ.தே.க. - 26,629
☆ஜே.வி.பி - 4,493
☆புதிய இடதுசாரி.மு - 254
☆சிஹல உறுமய - 218

### ஹபராதுவ
☆பொ.ஐ.மு. - 25,974
☆ஐ.தே.க. - 19,639
☆ஜே.வி.பி - 4,481
☆சிஹல உறுமய - 472
☆புதிய இடதுசாரி.மு - 206

### பெந்தர எல்பிட்டிய
☆பொ.ஐ.மு. - 30,213
☆ஐ.தே.க. - 22,813
☆ஜே.வி.பி - 4,442
☆சிஹல உறுமய - 520

## வன்னி மாவட்டம்

### முல்லைத்தீவு
☆பொ.ஐ.மு. - 439
☆ஐ.தே.க. - 182
☆ஜே.வி.பி. - 18
☆லிபரல் - 04
☆சிஹல உறுமய - 03
☆பூமி புத்ர - 01
அளித்த வாக்குகள் - 682
நிராகரித்தது - 30
செல்லுபடி - 652
பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் - 53,054

## மாத்தளை மாவட்டம்

### ரத்தோட்ட
☆பொ.ஐ.மு. - 27,615
☆ஐ.தே.க. - 21,331
☆ஜே.வி.பி. - 2,138
☆புதிய இடதுசாரி - 660
☆சிஹல உறுமய - 391
☆பிரஜைகள் முன்னணி - 108

### லக்கல
☆பொ.ஐ.மு. - 23,692
☆ஐ.தே.க. - 14,941
☆ஜே.வி.பி. - 1,283
☆புதிய இடதுசாரி மு. - 460
☆சிங்கள மகா சபா - 94
☆சிஹல உறுமய - 65

### மாத்தளை
☆ஐ.தே.க. - 22,089
☆பொ.ஐ.மு. - 19,877
☆ஜே.வி.பி. - 2,233
☆சிஹல உறுமய - 618
☆புதிய இடதுசாரி மு. - 440

### அக்குரஸ
☆பொ.ஐ.மு. - 30,699
☆ஐ.தே.க. - 21,688
☆ஜே.வி.பி. - 5,879
☆சிஹல உறுமய - 476
☆பூமிபுத்ர - 114

## பதுளை மாவட்டம்

### பசறை
☆ஐ.தே.க. - 15,491
☆பொ.ஐ.மு. - 13,848
☆இ.தொ.கா. - 4,131
☆ஜே.வி.பி. - 912
☆புதிய இடதுசாரி.மு - 216

### ஹாலி - எல
☆பொ.ஐ.மு. - 17,588
☆ஐ.தே.க. - 17,338
☆ஜே.வி.பி. - 1802
☆இ.தொ.கா. - 944
☆தே.ஐ.மு. - 293

### வெலிமட
☆ஐ.தே.க - 19,377
☆பொ.ஐ.மு. - 18,661
☆தே.ஐ.மு. - 2,577
☆ஜே.வி.பி - 1835
☆இ.தொ.கா. - 617
☆புதிய இடதுசாரி.மு - 161
☆சிஹல உறுமய - 152

### ஊவாபரணகம
☆பொ.ஐ.மு. - 18,152
☆ஐ.தே.க - 17,582
☆ஜே.வி.பி. - 1,815
☆இ.தொ.கா. - 394
☆தே.ஐ.மு. - 215
☆புதிய இடதுசாரி.மு - 210

### மகியங்கனை
☆ஐ.தே.க. - 28,850
☆பொ.ஐ.மு. - 17,792
☆ஜே.வி.பி. - 2,990
☆புதிய இடதுசாரி.மு - 341
☆சிஹல உறுமய - 105

### பதுளை
☆பொ.ஐ.மு. - 14,368
☆ஐ.தே.க. - 13,312
☆ஜே.வி.பி. - 1,777
☆இ.தொ.கா. - 631
☆சிஹல உறுமய - 297

### பண்டாரவளை
☆ஐ.தே.க. - 20,912
☆பொ.ஐ.மு. - 19,836
☆ஜே.வி.பி. - 1,928
☆தே.ஐ.மு. - 564
☆இ.தொ.கா - 1,927
☆புதிய இடதுசாரி.மு - 253
☆சிஹல உறுமய - 447

### ஹப்புத்தளை
☆ஐ.தே.க. - 16,430
☆பொ.ஐ.மு. - 13,699
☆இ.தொ.க - 2,975
☆ஜே.வி.பி. - 1,046
☆தே.ஐ.மு. - 473
☆புதிய இடதுசாரி.மு - 231
☆சிஹல உறுமய - 174

### வியலுவ
☆பொ.ஐ.மு. - 13,082
☆ஐ.தே.க. - 12,880
☆ஜே.வி.பி - 1,131
☆புதிய இடதுசாரி.மு - 227
☆இ.தொ.கா. - 332

## குருநாகல் மாவட்டம்

### மாவத்தகம
☆ஐ.தே.க. - 22,502
☆பொ.ஐ.மு. - 21,075
☆ஜே.வி.பி. - 2,760
☆தே.ஐ.மு. - 1,574
☆சிஹல உறுமய - 421
☆புதிய இடதுசாரி.மு - 298

### பண்டுகஸ்நுவர
☆பொ.ஐ.மு. - 20,849
☆ஐ.தே.க. - 19,348
☆ஜே.வி.பி. - 1,830
☆தே.ஐ.மு. - 1,302
☆சிஹல உறுமய - 316
☆புதிய இடதுசாரி.மு - 189

### குருநாகல்
☆ஐ.தே.க. - 23,046
☆பொ.ஐ.மு. - 20,826
☆ஜே.வி.பி. - 3,054
☆சிஹல உறுமய - 1,144
☆தே.ஐ.மு. - 821
☆புதிய இடதுசாரி.மு - 155

### வாரியப்பொல
☆பொ.ஐ.மு. - 21,184
☆ஐ.தே.க. - 18,932
☆ஜே.வி.பி. - 2,709
☆சிஹல உறுமய - 664
☆புதிய இடதுசாரி.மு - 213
☆தே.ஐ.மு. - 112

### கிரியாலளை
☆ஐ.தே.க. - 25,875
☆பொ.ஐ.மு. - 23,423
☆ஜே.வி.பி - 2,807
☆தே.ஐ.மு - 840
☆சிஹல உறுமய - 447
☆புதிய இடதுசாரி.மு - 286

### தம்பதெனியா
☆பொ.ஐ.மு. - 28,861
☆ஐ.தே.க. - 25,527
☆ஜே.வி.பி - 3,418
☆சிஹல உறுமய - 477
☆தே.ஐ.மு. - 451
☆புதிய இடதுசாரி.மு - 286

### பொல்காவல
☆பொ.ஐ.மு. - 21,421
☆ஐ.தே.க. - 20,788
☆ஜே.வி.பி - 2,374
☆தே.ஐ.மு. - 769
☆புதிய இடதுசாரி.மு - 213
☆சிஹல உறுமய - 516

## திகாமடுல்ல மாவட்டம்

### கல்முனை
☆பொ.ஐ.மு. - 22,459
☆ஐ.தே.க. - 12,300
☆சுயேச்சை 2 - 5,480
☆சுயேச்சை 5 - 325
☆ஜே.வி.பி. - 31

### அம்பாறை
☆பொ.ஐ.மு. - 44,391
☆ஐ.தே.க. - 40526
☆ஜே.வி.பி. - 4,627
☆பிர.முன்னணி - 234
☆லிபரல் கட்சி - 119
☆சிஹல உறுமய - 184

## கம்பஹா மாவட்டம்

### கம்பஹா
☆பொ.ஐ.மு. - 45,394
☆ஐ.தே.க. - 27,794
☆ஜே.வி.பி. - 2,284
☆புதிய இடதுசாரி மு. - 291
☆சிஹல உறுமய - 2,433
☆பூமிபுத்ர - 158

### மீரிகம
☆பொ.ஐ.மு. - 33,116
☆ஐ.தே.க. - 30,025
☆ஜே.வி.பி. - 6,832
☆தே.ஐ.மு. - 982
☆சிஹல உறுமய - 313
☆புதிய இடதுசாரி.மு - 310

### திவுலுப்பிட்டிய
☆பொ.ஐ.மு. - 32,294
☆ஐ.தே.க. - 28,894
☆ஜே.வி.பி. - 3,289
☆புதிய இடதுசாரி.மு - 254
☆சிஹல உறுமய - 658

### களனி
☆பொ.ஐ.மு. - 24,734
☆ஐ.தே.க. - 24,045
☆ஜே.வி.பி. - 5,651
☆சிஹல உறுமய - 2,292

## மாத்தறை மாவட்டம்

### மாத்தறை
☆பொ.ஐ.மு. - 28,736
☆ஐ.தே.க. - 19,706
☆ஜே.வி.பி. - 5,200
☆சிஹல உறுமய - 1,024

### தெனியாய
☆பொ.ஐ.மு. - 29,427
☆ஐ.தே.க. - 23,807
☆ஜே.வி.பி. - 3,986
☆சிஹல உறுமய - 166

### வெலிகம
☆பொ.ஐ.மு. - 29,608
☆ஐ.தே.க. - 20,276
☆ஜே.வி.பி. - 6,262

### கம்புறுப்பிட்டிய
☆பொ.ஐ.மு. - 28,022
☆ஐ.தே.க. - 18,823
☆ஜே.வி.பி. - 4,179
☆சிஹல உறுமய - 388
☆பூமிபுத்ர - 114

## மொனராகல மாவட்டம்

### மொனராகல
☆பொ.ஐ.மு. - 29,668
☆ஐ.தே.க. - 21,063
☆ஜே.வி.பி - 3228
☆புதிய இடதுசாரி.மு - 502
☆சிங்கள மகா சபா - 116
☆சிஹல உறுமய - 103
☆பிர. முன்னணி - 128

### பிபிலை
☆பொ.ஐ.மு. - 22,011
☆ஐ.தே.க. - 19,022
☆ஜே.வி.பி - 2,783
☆புதிய இடதுசாரி.மு - 431
☆சிங்கள மகா சபா - 103

### வெள்ளவாய
☆பொ.ஐ.மு. - 36,697
☆ஐ.தே.க. - 33,390
☆ஜே.வி.பி - 6,581
☆புதிய இடதுசாரி.மு - 609
☆புர.பெரமுன - 166
☆எக்ஸத் மகா சபை - 134

## அனுராதபுர மாவட்டம்

### அனுராதபுரம் மேற்கு
☆ஐ.தே.க. - 24,330
☆பொ.ஐ.மு. - 22,829
☆ஜே.வி.பி - 2,715
☆தே.ஐ.முன்னணி - 1,093
☆புதிய இடதுசாரி.மு - 318
☆சிஹல உறுமய - 110

### மதவாச்சி
☆பொ.ஐ.மு. - 23,108
☆ஐ.தே.க. - 16,896
☆ஜே.வி.பி - 2,255
☆தே.ஐ.மு. - 701
☆புதிய இடதுசாரி.மு - 309

### ஹொரவப்பொத்தான
☆பொ.ஐ.மு. - 19,196
☆ஐ.தே.க. - 18,084
☆ஜே.வி.பி - 2,295
☆தே.ஐ.மு - 2,885
☆புதிய இடதுசாரி.மு - 256

### தலாவ
☆பொ.ஐ.மு. - 35,026
☆ஐ.தே.க. - 24,754
☆ஜே.வி.பி - 4,303
☆தே.ஐ.மு - 834
☆புதிய இடதுசாரி.மு - 539

### மிஹிந்தலை
☆பொ.ஐ.மு. - 16,577
☆ஐ.தே.க. - 13,850
☆ஜே.வி.பி - 2,208
☆தே.ஐ.மு - 1,375
☆புதிய இடதுசாரி.மு - 252

### கெக்கிரவா
☆பொ.ஐ.மு. - 20,480
☆ஐ.தே.க. - 19,578
☆ஜே.வி.பி - 1,738
☆தே.ஐ.மு - 1,635
☆தே.இ.மு. - 325

## களுத்துறை மாவட்டம்

### களுத்துறை
☆பொ.ஐ.மு. - 31,469
☆ஐ.தே.க. - 26,641
☆ஜே.வி.பி - 5,516
☆தே.ஐ.முன்னணி - 1,093
☆சிஹல உறுமய - 2,428
☆புதிய இடதுசாரிமு. - 289

## நுவரெலியா மாவட்டம்

### கொத்மலை
☆பொ.ஐ.மு. - 21,623
☆ஐ.தே.க. - 20,183
☆ஜே.வி.பி - 950
☆பிர.முன்னணி - 123
☆சிஹல உறுமய - 96

## கேகாலை மாவட்டம்

### ருவான்வெல
☆பொ.ஐ.மு. - 23,375
☆ஐ.தே.க. - 18,298
☆ஜே.வி.பி - 2,196
☆சிஹல உறுமய - 628
☆தே.ஐ.முன்னணி - 215

## பொலநறுவ மாவட்டம்

### மெதிரிகிரிய
☆ஐ.தே.க. - 22,213
☆பொ.ஐ.மு. - 21,075
☆ஜே.வி.பி - 2,135
☆தே.ஐ.மு. - 1,048
☆சிஹல உறுமய - 123

### பொலநறுவ
☆ஐ.தே.க. - 35,197
☆பொ.ஐ.மு. - 34,979
☆ஜே.வி.பி - 4,691
☆தே.ஐ.மு. - 786
☆புதிய இடதுசாரி.மு - 569
☆சிஹல உறுமய - 317

## அம்பாந்தோட்டை மாவட்டம்

### தங்காலை
☆பொ.ஐ.மு. - 27,595
☆ஐ.தே.க. - 28,755
☆ஜே.வி.பி. - 12,298
☆புதிய இடதுசாரி.மு - 432
☆சிஹல உறுமய - 230
☆சிங்கள மகாசபா - 101

## இரத்தினபுரி மாவட்டம்

### இரத்தினபுரி
☆பொ.ஐ.மு. - 36,981
☆ஐ.தே.க. - 30,189
☆ஜே.வி.பி - 3,165
☆சிஹல உறுமய - 493
☆ஐ.இடதுசாரி.மு: - 456
☆ஐ.ஐ.தே.மு. - 130

### கலவான
☆பொ.ஐ.மு. - 21,224
☆ஐ.தே.க. - 15,246
☆ஜே.வி.பி - 1,137
☆இடதுசாரி.ஐ.மு. - 178

## மட்டக்களப்பு மாவட்டம்

### பட்டிருப்பு
☆த.வி.கூ. - 15,207
☆பொ.ஐ.மு. - 8,088
☆அ.இ.த.கா. - 4,635
☆ஐ.தே.க - 3,128
☆ஜே.வி.பி - 2,747
☆தே.ஐ.மு. - 2,796

## திருமலை மாவட்டம்

### திருகோணமலை
☆ஐ.தே.க - 12,861
☆பொ.ஐ.மு. - 11,928
☆த.வி.கூ. - 11,070
☆ஈ.பி.டி.பி - 3,882
☆அ.இ.த.கா. - 3,269
☆சுயேச்சை 2 - 2,268
☆ஜே.வி.பி - 901
☆சுயேச்சை 3 - 674
☆சுயேச்சை 6 - 526

## கம்பஹா மாவட்டம்

### தொம்பே
☆பொ.ஐ.மு. - 35,897
☆ஐ.தே.க. - 25,053
☆ஜே.வி.பி. - 4,576
☆சிஹல உறுமய - 972
☆புதிய இடதுசாரி.மு - 310

### அத்தனகல
☆பொ.ஐ.மு. - 42,537
☆ஐ.தே.க. - 23,245
☆ஜே.வி.பி - 6,229
☆தே.ஐ.மு. - 3,475
☆சிஹல உறுமய - 1,315
☆புதிய இடதுசாரி.மு - 286

### வத்தளை
☆ஐ.தே.க. - 32,570
☆பொ.ஐ.மு. - 29,015
☆ஜே.வி.பி - 4,146
☆சிஹல உறுமய - 1,320
☆புதிய இடதுசாரி.மு - 226

## களுத்துறை மாவட்டம்

### ஹொரண
☆பொ.ஐ.மு. - 36,651
☆ஐ.தே.க. - 27,259
☆ஜே.வி.பி - 4,191
☆சிஹல உறுமய - 1,239
☆புதிய இடதுசாரி.மு - 452

### பாணந்துறை
☆பொ.ஐ.மு. - 30,848
☆ஐ.தே.க. - 25,994
☆ஜே.வி.பி. - 7047
☆சிஹல உறுமய - 4,035
☆தே.ஐ.மு. - 2,857
☆புதிய இடதுசாரி.மு - 363

### புலத்சிங்கள
☆பொ.ஐ.மு. - 24,308
☆ஐ.தே.க. - 22,112
☆ஜே.வி.பி - 2,034
☆சிஹல உறுமய - 597
☆தே.ஐ.மு. - 479

### அகலவத்தை
☆பொ.ஐ.மு. - 28,531
☆ஐ.தே.க. - 27,665
☆ஜே.வி.பி - 4,128
☆சிஹல உறுமய - 835
☆தே.ஐ.மு. - 153

### பேருவளை
☆பொ.ஐ.மு. - 30,179
☆ஐ.தே.க. - 29,392
☆ஜே.வி.பி - 3,988
☆தே.ஐ.மு. - 3,671
☆புதிய இடதுசாரி.மு - 299
☆புர பெரமுன - 187

### மத்துகம
☆பொ.ஐ.மு. - 29,968
☆ஐ.தே.க. - 25,518
☆ஜே.வி.பி - 4,709
☆சிஹல உறுமய - 1,648
☆தே.ஐ.மு. - 519
☆புதிய இடதுசாரி.மு - 426

## புத்தளம் மாவட்டம்

### சிலாபம்
☆பொ.ஐ.மு. - 30,124
☆ஐ.தே.க. - 28,110
☆ஜே.வி.பி - 2,558
☆தே.ஐ.மு. - 833
☆சிஹல உறுமய - 557

### நாத்தாண்டியா
☆பொ.ஐ.மு. - 25,646
☆ஐ.தே.க. - 20,078
☆ஜே.வி.பி - 1,909
☆தே.ஐ.மு. - 1,408
☆சிஹல உறுமய - 339

## கொழும்பு மாவட்டம்

### தெகிவளை
☆பொ.ஐ.மு. - 14,382
☆ஐ.தே.க. - 19,646
☆சிஹல உறுமய - 3,200
☆தே.ஐ.மு. - 977
☆அ.இ.த.கா - 622
☆புதிய இடதுசாரிமு. - 194
☆இ.தொ.கா. - 122

### கோட்டே
☆ஐ.தே.க. - 22,207
☆பொ.ஐ.மு. - 20,149
☆சிஹல உறுமய - 4,881
☆ஜே.வி.பி. - 3,566
☆தே.ஐ.மு. - 266

### கொழும்பு வடக்கு
☆ஐ.தே.க. - 33,212
☆பொ.ஐ.மு. - 13,422
☆தே.ஐ.மு. - 3,149
☆ஜே.வி.பி. - 2,031
☆இ.தொ.க. - 1,099
☆சிஹல உறுமய - 1,043
☆அ.இ.த.கா - 910

### கொழும்பு கிழக்கு
☆பொ.ஐ.மு. - 22,232
☆ஐ.தே.க. - 13,922
☆சிஹல உறுமய - 2,939
☆ஜே.வி.பி - 2,844
☆அ.இ.த.கா. - 927

### பொரளை
☆ஐ.தே.க. - 19,588
☆பொ.ஐ.மு. - 14,025
☆சிஹல உறுமய - 2,106
☆ஜே.வி.பி - 1,990
☆தே.ஐ.மு. - 1,441
☆இ.தொ.கா. - 210
☆புர பெரமுன - 143
☆புதிய இடதுசாரி.மு - 163
☆அ.இ.த.கா. - 136

### கொலன்னாவ
☆பொ.ஐ.மு. - 39,394
☆ஐ.தே.க. - 30,522
☆ஜே.வி.பி - 5,741
☆சிஹல உறுமய - 2,604
☆தே.ஐ.மு. - 1,689

## மாத்தளை மாவட்டம்

### தெவிநுவர
☆பொ.ஐ.மு. - 24,263
☆ஐ.தே.க. - 17,826
☆ஜே.வி.பி - 7,489
☆சிஹல உறுமய - 395

### தம்புள்ள
☆பொ.ஐ.மு. - 35,421
☆ஐ.தே.க. - 30,455
☆ஜே.வி.பி - 4,396
☆புதிய இடதுசாரி.மு - 778
☆சிஹல உறுமய - 279

## இரத்தினபுரி மாவட்டம்

### எகலியகொட
☆பொ.ஐ.மு. - 27,885
☆ஐ.தே.க. - 23,985
☆ஜன.இடதுசாரி மு. - 4,272
☆ஜே.வி.பி - 1,907

### றக்குவான
☆பொ.ஐ.மு. - 28,497
☆ஐ.தே.க. - 27,685
☆ஜே.வி.பி - 1,937

(6ஆம் பக்கம் பார்க்க)

# வடமராட்சி ஸ்ரீ வல்லிப
# தேர்த் திருவிழா
12-10-2

## தன்னைத் தானே பிரதிஷ்டை செய்து கொண்ட வல்லிபுரத்தான்!

பாற் கடலில் பள்ளி கொள்ளும் பரந்தாமன் பாக்கு நீரிணையில் மீனாக வடிவெடுத்தான். கடலைக் கலக்கினான். அலைகள் பனையளவு உயரமாக மேலே எழுந்தன. மீனைப் பிடிக்கச் சென்றவர்கள் ஆண்டவன் அருளால் உயிரோடு கரைசேர்ந்தனர். மூன்று நாள்களாக மீன் வேடிக்கை காட்டியது. அயலூர் மக்களும் பார்த்து அதிசயித்தனர். கரை ஓரமாக வல்லிநாச்சி என்ற மாது நாராயண மந்திரம் செபித்துக்கொண்டிருந்தாள். மீன் அவள் மடியில் துள்ளி விழுந்தது. அவள் மடியில் அழகிய குழந்தையின் வடிவாகக் காட்சி கொடுத்தது. வல்லிநாச்சியார் உடல் சிலிர்க்க, உள்ளம் புளகிக்க, கண்கள் பனிக்க பேரின்ப நிலையில் திகைத்தாள்.

முற்பிறப்பில் 'நான் உன்மடியில் தவழ்வேன்' என்று கண்ணன் திருவாய் மலர்ந்ததை நினைத்து பெருமிதமடைந்தாள். அங்கிருந்த மக்கள் ஆடினார்கள்; பாடினார்கள்; தாம் இதுவரை அனுபவத்தில் உணராத இன்பக் கிளுகிளுப்பில் இருந்த போது குழந்தை சக்கர வடிவமானது. சங்கு சக்கரம் என்று துள்ளிப் பாடிய ஓசை கடல் அலை ஒலியையும் வென்றது.

சக்கரத்தை அண்மையில் இருந்த இராசதானிக்கு எடுத்துச் செல்லத் தீர்மானித்தனர். மேள தாளங்களுடன் பல்லக்கொன்றில் வைத்து அவ்வூர் மக்கள் காவிச் சென்றனர். இடையே தாகத்திற்கு நீர் அருந்த காவியவர்கள் பல்லக்கை வைத்துச் சென்றனர். திரும்பி வந்து பார்த்தபோது சக்கரம் மணலில் குத்திக் கொண்டிருந்தது. மணலைத் தோண்டி எடுக்க முயன்ற போது சக்கரம் கீழே போனது. அப்போது அங்கே வந்த அடியார் ஒருவர் இந்த இடத்தில் இருப்பதே பரம்பொருளின் விருப்பம். சுயம்பு மூர்த்தியாக தன்னைத்தானே பிரதிஷ்டை செய்து கொண்டார். இந்த இடத்தில் நாம் பிரதிஷ்டை செய்வோம் என்று கூறி அவர் கொண்டு வந்த சக்கரத்தை பிரதிஷ்டை செய்தார். அவர் பலகாலம் ஸ்ரீ வல்லிபுரேசனுக்கு பூசை செய்து வந்ததாகவும் முன்னோர் கூறுவர்.

பலகாலமாக தனிப்பட்டவர்களால் இவ்வாலயம் நடத்தப்பட்டு வந்தது. வடமராட்சி மக்கள் சபை ஒன்றினால் நடத்த நீதிமன்றத்தின் அனுமதி பெற்றனர். அதன் பின் ஆண்டு தோறும் வேகமாக வளர்ந்து வருகின்றது. இவ்வாண்டு புதிய வசந்த மண்டபத்தில் ஸ்ரீ வல்லிபுரேசன் எழுந்தருளும் பாக்கியம் பெற்றோம்.

முற்காலத்தில் கனகசிங்கன் என்ற கலிங்க மன்னன் இதன் அண்மையிலுள்ள பகுதியை ஆட்சி புரிந்ததாக பழைய நூல்கள் கூறுகின்றன. ஆங்கிலேயர் இங்குள்ள மணல் கும்பிகளில் மக்கள் எடுத்துக் கொடுத்த நாணயங்களுக்கு கூடிய விலை கொடுத்து வாங்கியதையும் முதியவர்கள் அனுபவரீதியாக அறிவர். நூறு வருடங்களுக்கு முன் வடமராட்சிக்கு வருவோர், இங்குள்ள அதிகமான மக்களின் நெற்றியில் வெள்ளைத் திருநாமம் இருப்பதைக் கண்டு இங்கு திருவருள் நிறைந்துள்ளது என்று கூறி மகிழ்வார்கள் என்றும் மூதாதையர் கூறுவர். போர்த்துக்கேயர் குடத்தனையிலிருந்த கத்தோலிக்க கோயிலுக்கு ஞாயிறு தோறும் எல்லோரும் போக வேண்டும் என்று சட்டம் போட்டார்கள். அங்கு சட்டத்திற்குப் பயந்து போனவர்கள் ஸ்ரீ வல்லிபுரேசனையே தரிசித்து மனச்சாந்தி பெற்றனர் என்பதும் முன்னோரின் அனுபவ மொழிகள். இவையாவும் ஸ்ரீ வல்லிபுரேசனது பூமி, சமுத்திரம், சக்கரம் என்பவை பக்தர்களைக் கவர்ந்து பாவந்தீர்க்க வல்லவை என்பதை அறியலாம்.

மு.சதானந்தன்
இளைப்பாறிய ஆசிரியர்.

(C/13316)

## ஆலய சிவாச்சார்யர்களின் ஆசியுரையும் அருளுரையும்

பரந்தாமன் அடியார்களே!

எல்லாம்வல்ல எம்பெருமான் காத்தற் கடவுளாம்ஸ்ரீமந் நாராயணன் கோவளை ஆழியுளாழியாயுதித்து, வல்லிபுரக்கோயிலில் வீற்றிருந்து அருளாட்சி புரிகின்றான். ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயிலின் வருடாந்த மகோற்சவம் கடந்த செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

பஞ்சகிருத்தியங்களிலொன்றான (ஆன்மாக்களின் ஆணவத்தை) அழித்தல் தொழிலைக்குறிப்பதும் திருவிழாக்களிலே வெகுசிறப்பு வாய்ந்ததுமான தேர்த் திருவிழா இன்றைய தினம் (ஒக்ரோபர் 12) வியாழக்கிழமை வெகு சிறப்பாக நடைபெறுகின்றது.

சக்கரரூப மாயவன் தேரிலேறி வீதிவலம் வரும் இன்றைய தினம் மிகப் புனிதமான நாளாகும். பாவங்கள் அனைத்தும் தொலையும் நாள். மாயவனடியார்கள் மனங்குளிர உலகோரனைவரும் இன்புற, தமிழர்களுக்கு நிலையான அமைதி கிடைத்திட, அவனவனிடத்தினிலவனவன் வதிந்திட, எம்பெருமான் சக்கரரூப மாயவன் என்றென்றும் துணை செய்வான் என அவன் தாள் பணிகின்றோம்.

பக்தகோடிகள் அனைவருக்கும் எமது நல்லாசிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

நன்றி சுபம்
*"கோவிந்த நாம சங்கீர்த்தனம்"*
*"கோவிந்தா ஹரி கோவிந்தா"*

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார்
சுவாமிகோயில்
துன்னாலை வடக்கு,
புலோலி.

பிரம்மஸ்ரீ ச.க.புருஷோத்தமக்குருக்கள்,
பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக்குருக்கள்,
கோயில் சிவாச்சார்யர்கள்.

## சொர்க்கமே தெரியுது!

கோவிலில் கொடியேறுது
ஊரெல்லாம் குதூகலமாகுது
பாரிலமைதி வந்திட
பரந்தாமனை மனம் நாடுது
விரதமிருந்து வேண்டிடின்
சுரங்களனைத்தும் அகலும்
சுகமும் அங்கே தோன்றும்
வேதநாயகன் வலம் வர
வேதனை களலுது
போதனைகள் கேட்பதால்
மனம் புனிதமடையுது
எரியும் சுவாலையெனத் தெரியுது
தேரிலவன் வருகையில்
திருநாமத்தினொளியும் தெரியுது
விருப்புடனவனைப் பணிவோம்
வல்லிபுரத்துச் சக்கரத்தான்
வலம் வர சொர்க்கமே தெரியுது!

- மாருதி -

## வல்லிபுர அ

ஆழ்வாரின் தேர்த்திருவிழா இன்ற ...கதி
தினத்தில் மகோற்சவத்தைப் பற்றிய சில கருத்து
திருவருள் கிடைத்திருக்கிறது.

உற்சவம் என்னும் சொல் உத் - மேலான,
ஞானம்; சவம் = போக மோட்சம் என்னும் பொரு
ளது. இறைவன் ஐந்தொழில்களையும் செய்து
வும் மேலான ஞானத்தையும் போக மோட்சத்
கூறுவர். நித்திய பூசைகளின் போது ஏற்படும்
யச்சித்தமாக அமைவது நைமித்திக உற்சவ
அது ஆகம விதிப்படி தவறின்றி அந்தணர்கள
நன்மை பயக்கும்.

மகோற்சவத்தின் ஆரம்பமாகிய கொடியேற்றம்
வரை பத்துத்தினங்கள், பதினைந்து தினங்கள்
மரபு. கொடியேற்றத்துக்குக் கொடித்தம்பம், கெ
இன்றியமையாதன. கொடித்தம்பம் இறைவனையும்
கயிறு ஆன்மாவைப் பந்தித்துள்ள பாசமாகிய மும்
கொடியேற்றம் படைத்தலையும் வாகன உற்சவ
திருவிழா அழித்தலையும் மௌன உற்சவம் ம
ளலையும் சுட்டுகின்றன.

தேரானது எரியும் அக்கினியின் சுவாலை பே
பாகங்களில் பிரபஞ்சத்தை எடுத்துக் காட்டும் மு
கப்பட்டிருக்கின்றன. இதில் எழுந்தருளும் மூர்




ஹப்பி ரெக்ஸ்ரைல்
இல.110, பிரதான வீதி,
நெல்லியடி கரவெட்டி

நேரு போட்டோ அன் வீடியோ
உங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, பிறந்தநாள் விழா மற்றும் விசேட வைபவங்களை சிறந்தமுறையில் புகைப்படம் எடுத்திட
விரபாகுகட்டடம் (மேல்மாடி) பஸ்நிலையம் பருத்தித்துறை.
மதவடி ஒழுங்கை கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

கஜமுகன் தொலைத்
பிரதான வீதி,
உள்நாடு: 021-3049, 021-305
வெளிநாடு: 0094- 21-3049, 00

மாருதி ரெலிக் கொமியுனிக்கேசன்
பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.

நாதன்ஸ் தொலைத்தொடர்பு சேவை
பிரதான வீதி, பருத்தித்துறை.
உள்நாடு : 070-212279, 021-3278
வெளிநாடு : 0094-70-212279

சுபாஸ் பே
பாண், கேக், பணிஸ் உற்பத்தி
இணை நிறுவனங்கள்: லவ்
லவ்லி ஓடியோ வீடியோ
மெயின் வீதி,

மாயவா தொலைத் தொடர்பகம்
உள்நாடு : 070-213082
வெளிநாடு: 0094-70-213082
வல்லிபுரம், புலோலி.

ஜனனி நகை மாடம்
தங்கநகை வியாபாரம்
33, பிரதான வீதி, மருதடி, பருத்தித்துறை.
கிளை: புதிய ஜனனி நகைமாடம் பிரதான வீதி, பருத்தித்துறை.

நெல்லைக் குமரன்
பிரதான வீதி,

றோயல் தொலைத் தொடர்பகம்
துன்னாலை, கரவெட்டி.
உள்நாடு : 070-212416
வெளிநாடு : 0094-70-212416

சுசீலா ஆபரண மாளிகை
தங்கநகை வியாபாரம்
258, பிரதான வீதி, பருத்தித்துறை.

மருதம் தொலைத்
ஹாட்வெயார் பொ

சீமாட்டி புடைவை
பிரதான வீதி,
கரவெட்டி.

# லிபுர ஆழ்வார் ஆலய
# ரச் சிறப்பு மலர்
# 10-2000

## ஆழ்வாரைச் சரண் அடைவோம்!

ா இனா ...கதி பூர்வமாக நிகழ்கிறது. இத்
ற்றிய சில ...ருத்துக்களை நினைவு கூர்வதற்குத்

உத் - மேலான, சவம் ஐந்தொழில்; உத்
ம் என்னும் பொருள்களை உடையதாய் உள்
ளையும் செய்து உயிர்களைக் காப்பது என
போக மோட்சத்தையும் கொடுப்பது எனவும்
போது ஏற்படும் குற்றம் குறைகளுக்குப் பிரா
யித்திக உற்சவமாகிய மகோற்சவமாதலால்
றி அந்தணர்களால் இயற்றப்படின் நாட்டுக்கு


கிய கொடியேற்றம் முதல் இறுதியாகிய தீர்த்தம்
ணைந்து தினங்கள் என மகோற்சவம் நிகழ்வது
காடித்தம்பம், கொடிச்சீலை, கயிறு ஆகியன
ம் இறைவனையும் கொடிச்சீலை ஆன்மாவையும்
ள பாசமாகிய மும்மலங்களையும் குறிக்கின்றன.
வாகன உற்சவங்கள் காத்தலையும் தேர்த்
ான உற்சவம் மறைத்தலையும் தீர்த்தம் அரு

பின் சுவாலை போன்ற தோற்றமாகும். தேரின்
த்துக் காட்டும் முறையில் உருவங்கள் செதுக்
ழுந்தருளும் மூர்த்தியும் உக்கிர உருத்திர

மூர்த்தியாகவே தேரில் ஆரோகணிக்கின்றார். இதை உணர்த்துவதற்காகவே அம் மூர்த்தியைச் சிவப்பு நிறப்பொருள்களால் அலங்கரிப்பர். ஆலய பிரதம குருக்களும் அவ்வாறே சிவப்பு நிறமான ஆடை ஆபரணங்களை அணித்திருப்பார். இதயத்தைக் குறிப்பதாகிய அதன் பீடத்தில் மூர்த்தி ஆரோகணித்ததும் கிரியைகள் நிகழ்கின்றன. பின்பு தேர்க்காலிலே தேங்காய்களை அடியார்கள் சிதற உடைப்பர். தேங்காய் ஓடு ஆணவமலத்தைக் குறிக்கிறது. ஆணவ மலத்தை வலிகெடச் செய்து அறிவு பிரகாசிக்க வேண்டும் என்பது இதன் குறிக்கோளாகும். தேங்காய் ஓடு பிரிந்து வெண்ணிற உட்பாகம் வெளிப்படுகின்றது. இது மலம் நீங்கி ஆன்மா இறைவனை அடைவதற்குரிய பக்குவம் கிடைக்கவேண்டும் என்பதைக் குறிக்கிறது. தேர் உலா பூரணமானதும் உக்கிரமூர்த்தம் தணிந்து சாந்தமூர்த்தத்தை ஏற்படுத்தும் பொருட்டு அர்ச்சனைகள் செய்யப்பட்டுப் பச்சை சாத்திப் பூசை செய்யும் முறை உளது. அழித்தற்றொழிலை ஆற்றிவரும் சங்கார மூர்த்தியைக் குளிர்விக்கும் செயலே இதுவாகும். பிரதம சிவாச்சாரியாரும் பச்சை வேட்டி சால்வைகளுடன் காட்சியளிப்பார்.

வல்லிபுர ஆழ்வாராகிய சுதர்சன உற்சவ மூர்த்தி மெய்யன்பர்களுக்கு அருள்புரிவதற்காகத் தேரேறி வருகிறார். அந்த அருட்காட்சியைக் கண்டு தரிசிப்பதற்கு நாம் என்ன புண்ணியம் செய்தோம் என்று எண்ணி அப்பேற்றைப் பெற்றதனால் இன்பம் அடைந்து இறும்பூது எய்துவோம்.

**சே.ஏகாம்பரநாதன்,**
இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர்,தென்புலோலி.



## அறங்காவலர் குழுவின் செய்தி

ஆலயங்களில் நடைபெறும் வருடாந்த மகோற்சவங்களுக்கு முடிவைப் பது போல் அமைவது இறுதி இரு நாள்களில் நடைபெறும் தேர்உற்சவம், தீர்த்த உற்சவம் ஆகியனவாகும். இவ்வுற்சவங்களில் பல்லாயிரக் கணக்கான மக்கள் பங்கெடுத்து தமது நேர்த்திகளை நிறைவேற்றி ஆன்மீக தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வது மரபு.

யாழ். பிரதேசத்தில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களில் வருடாந்த உற்சவங்களின் வரிசையில் இறுதியாக இடம்பெறும் வருடாந்த மகோற்சவம் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய உற்சவமாகும். இதில் பங்கு கொண்டு காத்தற் கடவுளாம் வல்லிபுர மாயவனைத் தரிசித்து அருள் பெற நாட்டின் எட்டுத்திக்குகளில் இருந்தும் பக்தர்கள் வருவார்கள். விசேடமாக தேர் உற்சவம் தீர்த்த உற்சவ நாள்களில் யாழ்.பிரதேச வீதிகளில் மக்கள் கூட்டம் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம் நோக்கி வந்து கொண்டிருப்பதும் முழுப்பிரதேசமும் பக்திப் பரவசத்துடன் தோன்றுவதும் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும்.

வல்லிபுர மாயவன் உக்கிரமாக பக்தர்களின் தோளில் ஆலயத்திலிருந்து காலை 8.00 மணியளவில் வெளிவந்து "கோவிந்தா! கோபாலா!" என்ற பக்த கோசங்கள் மத்தியில் தேரேறி வீதி உலா வந்து பிற்பகல் 2.00 மணிஅளவில் உக்கிரம் நீங்கி சாந்தி பெற்ற கண்ணனாக தேரிலிருந்து மீண்டும் ஆலயம் அடைவார்.

மறுதினமான பூரணை தினத்தில் சந்திரோதயத்தில் வடகோடிச் சமுத்திரத்தில் பாக்கு நீரிணை இந்து சமுத்திரத்தில் சங்கமமாகும் நிலையில் தீர்த்தமாடி அதற்கு அடுத்த தினமான இறுதித் தினத்தில் ஆலயத்தில் அமைந்துள்ள கேணி நீர் நிலையிலும் தீர்த்தமாடி கொடியிறக்கத்துடன் உற்சவ நிகழ்ச்சிகள் பூர்த்தியாகும்.

இத்தினங்களில் நேரில் பங்கு கொள்ள முடியாத பக்தர்களின் கையில் இம்மலர் தவழும் பொழுது அவர்களையும் மானசீகமாக ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கு இட்டுச் சென்று அங்கே எழுந்தருளியுள்ள சக்கர ஆழ்வாரை மனத்திருத்தி பூசித்து அருள் பெற இம்மலர் உதவும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இம்மலர் உருப்பெற காரணமாயிருந்த யாவருக்கும் எனது வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ.அன்னலிங்கம்.**
தலைவர்
அறங்காவற்குழு.

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் பஞ்ச புராணம் ஓதுதல் போட்டி முடிவுகள்

08-10-2000 ஞாயிறு பகல் 1.30 மணியளவில் கோயிலின் புதிய வசந்த மண்டபத்தில் நடைபெற்ற பஞ்ச புராணம் ஓதுதல் போட்டி முடிவுகள் பின்வருமாறு:-

✪ முதலாம் இடம்:- செல்வி சைந்தவி பரமேஸ்வரன்
*சாவகச்சேரிஇந்துக்கல்லூரி.*

✪ 2 ஆம் இடம்:- செல்வி தர்சிகா நாகேந்திரன்.
*பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை.*

✪ 3 ஆம் இடம்:-
(1) செல்வி கஸ்தூரி கணேசமூர்த்தி
*கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி.*
(2) செல்வன் சிவராசா கோயிலாம்பிள்ளை
*கலட்டி றோ. க.த.க.பாடசாலை.*

மேலும் ஆறுதல் பரிசில்களைப் பெறத் தகுதி உடைய ஒன்பது மாணவர்களின் விவரம்:-

(1) செல்வி சௌமியா புருஷோத்தமக் குரு
*வடஇந்து மகளிர் கல்லூரி.*
(2) செல்வி இந்திராபிரியதர்சினி சீவரட்ணம்
*யாழ் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.*
(3) செல்வன் கபிலன் இராசையா
*இமையாணன் அ.த.க.பாடசாலை*
(4) செல்வி வாசுகி புருசோத்தமக்குரு
*வடஇந்து மகளிர் கல்லூரி.*
(5) செல்வி கிருஷ்ணப்பிரியா கோபால கிருஷ்ணன்
*இமையாணன் அ.த.க. பாடசாலை.*
(6) செல்வன் நிதர்சன் இராஜேஸ்வரன்
*ஹாட்லிக்கல்லூரி.*
(7) செல்வி காயத்திரி சக்திவேல்
*சிவப்பிரகாச வித்தியாசாலை.*
(8) செல்வி சங்கவி நாகமுத்து
*விக்கினேஸ்வராக் கல்லூரி.*
(9) செல்வன் அருண்குமார் கமலேஸ்வரன்
*ஹாட்லிக் கல்லூரி.*

ஏனைய பங்குபற்றிய மாணவர்களுக்கும் பரிசில் வழங்கப்படும்.


...ாலைத் தொடர்பகம்
...வீதி, கோப்பாய்.
...-3049, 021-3050
...4- 21-3049, 0094-21-3050

...ம் பேக்கரி
...ம் உற்பத்தி விற்பனையாளர்கள்
...னங்கள்: லவ்லி கூல்பார்,
...யோ வீடியோ சென்ரர்,
நெல்லியடி.
தொலைபேசி: 3214

...குமரன் றேடர்ஸ்
நெல்லியடி.

...லைத் தொடர்பகம்
...ர் பொருள்கள்

...டைவை அகம்
நெல்லியடி,
...வெட்டி.

வே. மனோகரன்,
துவிச்சக்கரவண்டி உதிரிப்பாகங்கள் விற்பனை
சாவகச்சேரி வீதி, மந்திகை.
கோபால் தொலைத்தொடர்பகம்
சாவகச்சேரி வீதி, மந்திகை
070-21-2958, 070-21-2693
070-21-2372
021-3277

மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்
உரிமையாளர்: தி.மகேஸ்வரன்.
யாழ்ப்பாணம்.

'தங்கம்ஸன்'
மின்சாரப் பொருள்கள்,
பிளாஸ்ரிக் பொருள்கள்
கொடிகாமம் வீதி, நெல்லியடி.

செல்லமுத்து புடைவை மாளிகை
பிரதான வீதி, நெல்லியடி.

ஜெகா தொலைத் தொடர்பகம்
கோப்பாய் பிரதேச செயலர் அலுவலகத்திற்கு அருகில்
உள்நாடு : 021-2651
வெளிநாடு : 0094-21-2652 } கோப்பாய்
உள்நாடு : 021-3274
வெளிநாடு : 070-21-2228 } நெல்லியடி

தூரன் நகை மாளிகை
தங்கநகை வியாபாரம்
பிரதான வீதி, மருதடி, பருத்தித்துறை.
கிளை: பிரதான வீதி, (பஸ்நிலைய அருகில்),
பருத்தித்துறை

கணேசன் ஹாட்வெயர்
பிரதான வீதி, நெல்லியடி.
தொலைபேசி : 3290

ராகுல சூரியன்ஸ் புடைவையகம்
(தரமான துணிகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்)
122, 329 பிரதான வீதி,
பருத்தித்துறை.

# தொகுதி.....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

### கொலன்ன
☆பொ.ஐ.மு. - 36,592
☆ஐ.தே.க. - 33,829
☆ஜே.வி.பி - 7,895
☆ஜன.இடதுசாரி மு. - 322

### கல்மடுவ
☆பொ.ஐ.மு. - 25.563
☆ஐ.தே.க. - 20,385
☆ஜே.வி.பி - 1,556
☆ஜன.இடதுசாரி மு. - 181
☆சிஹல உறுமய - 179

## திருகோணமலை மாவட்டம்

### சேருவிலை
☆பொ.ஐ.மு. - 18,517
☆ஐ.தே.க. - 14,489
☆ஜே.வி.பி - 2,056
☆தமி.வி.கூ. - 944
☆ஈ.பி.டி.பி. - 316
☆சிஹல உறுமய - 172
☆அ.இ.த.கா. - 105

## குருநாகல் மாவட்டம்

### கட்டுகம்பொல
☆பொ.ஐ.மு. - 30,492
☆ஐ.தே.க. - 23,173
☆ஜே.வி.பி - 2,877
☆தே.ஐ.மு. - 633
☆புதிய இடதுசாரி மு. - 236
☆சிஹல உறுமய - 571

### குளியாப்பிட்டிய
☆பொ.ஐ.மு. - 25374
☆ஐ.தே.க. - 26570
☆தே.ஐ.மு. - 1,834
☆ஜே.வி.பி. - 2,916

### நிக்கரவெட்டிய
☆பொ.ஐ.மு. - 25,831
☆ஐ.தே.க. - 22,751
☆ஜே.வி.பி - 2,607
☆தே.ஐ.மு. - 827

### பிங்கிரிய
☆பொ.ஐ.மு. - 25,696
☆ஐ.தே.க. - 23,852
☆ஜே.வி.பி - 1,807
☆தே.ஐ.மு. - 860

### யாப்பகூவ
☆பொ.ஐ.மு. - 30,832
☆ஐ.தே.க. - 28,227
☆ஜே.வி.பி - 3,824
☆புதிய இடதுசாரி மு. - 366

## கேகாலை மாவட்டம்

### கேகாலை
☆பொ.ஐ.மு. - 22,237
☆ஐ.தே.க. - 16,091
☆ஜே.வி.பி - 3,509
☆சிஹல உறுமய - 740

## நுவரெலியா மாவட்டம்

### வலப்பன
☆பொ.ஐ.மு. - 24,390
☆ஐ.தே.க. - 21,144
☆ஜே.வி.பி - 1,290
☆புர. பெரமுனை - 161

## காலி மாவட்டம்

### அம்பலாங்கொட
☆பொ.ஐ.மு. - 22,657
☆ஐ.தே.க. - 18,662
☆ஜே.வி.பி - 3,772
☆சிஹல உறுமய - 404
☆புதிய இடதுசாரி மு. - 274

### காலி
☆ஐ.தே.க. - 22351
☆பொ.ஐ.மு. - 20,004
☆ஜே.வி.பி - 3,855
☆சிஹல உறுமய - 833

### பத்தேகம
☆பொ.ஐ.மு. - 31,845
☆ஐ.தே.க. - 23.548
☆ஜே.வி.பி. - 3,937
☆தே.ஐ.மு. - 3,902
☆சிஹல உறுமய - 305

### ரத்கம
☆பொ.ஐ.மு. - 26,619
☆ஐ.தே.க. - 19,910
☆ஜே.வி.பி - 4,274
☆சிஹல உறுமய - 459

## மட்டக்களப்பு மாவட்டம்

### மட்டக்களப்பு
☆ தே.ஐ.மு. - 27,079
☆ ஐ.தே.க. - 21,267
☆ த.வி.கூ. - 14,621
☆ பொ.ஐ.மு. - 6,436
☆ அ.இ.த.கா. - 1,831
☆ புளொட் - 5,539
☆ ஈ.பி.டி.பி. - 1,950
☆ சுயேச்சை - 1 - 2,802

## திகாமடுல்ல மாவட்டம்

### பொத்துவில்
☆தே.ஐ.மு. - 39,753
☆ஐ.தே.க. - 30,750
☆சுயேச்சை 2 - 10,729
☆ஜே.வி.பி. - 443
☆புர.பெரமுன. - 172

### சம்மாந்துறை
☆தே.ஐ.மு. - 25,501
☆ஐ.தே.க. - 14.625
☆சுயேச்சை 2 - 3,144
☆சுயேச்சை 5 - 408

## மாத்தறை மாவட்டம்

### ஹக்மன
☆பொ.ஐ.மு. - 28,636
☆ஐ.தே.க. - 21,128
☆ஜே.வி.பி - 4,522
☆சிஹல உறுமய - 215

## கொழும்பு மாவட்டம்

### கடுவெல
☆பொ.ஐ.மு. - 43,474
☆ஐ.தே.க. - 35,792
☆ஜே.வி.பி. - 11,868
☆சிஹல உறுமய - 4.701

### ஹோமகம
☆பொ.ஐ.மு. - 47,330
☆ஐ.தே.க. - 33,930
☆ஜே.வி.பி. - 8.758
☆சிஹல உறுமய - 3,273

### இரத்மலானை
☆பொ.ஐ.மு. - 17,886
☆ஐ.தே.க. - 18,556
☆ஜே.வி.பி. - 4,454
☆சிஹல உறுமய - 3,356
☆தே.ஐ.மு. - 548
☆அ.இ.த.கா. - 210
☆புதிய இடதுசாரி - 154

### மஹரகம
☆பொ.ஐ.மு. - 36,995
☆ஐ.தே.க. - 28,952
☆ஜே.வி.பி. - 2,174
☆சிஹல உறுமய - 6.302

### அவிசாவளை
☆பொ.ஐ.மு. - 33,986
☆ஐ.தே.க. - 26,671
☆ஜே.வி.பி. - 4,434
☆சிஹல உறுமய - 1,086
☆அ.இ.த.கா. - 832
☆புதியஇடதுசாரி மு. - 369

### கொழும்பு மேற்கு
☆ஐ.தே.க. - 15,480
☆பொ.ஐ.மு. - 4,999
☆சிஹல உறுமய - 1,418
☆அ.இ.த.கா. - 1,371
☆ஜே.வி.பி. - 709

### மொறட்டுவ
☆பொ.ஐ.மு. - 36,853
☆ஐ.தே.க. - 35,570
☆ஜே.வி.பி. - 6,849
☆சிஹல உறுமய - 3,721
☆தே.ஐ.மு. - 478

### கொழும்பு மத்தி
☆ஐ.தே.க. - 57,678
☆பொ.ஐ.மு. - 20,414
☆தே.ஐ.மு. - 16,420
☆ஜே.வி.பி. - 2,806
☆சிஹல உறுமய - 1,683
☆அ.இ.த.கா - 247

## களுத்துறை மாவட்டம்

### பண்டாரவளை
☆பொ.ஐ.மு. - 35,860
☆ஐ.தே.க. - 27,434
☆ஜே.வி.பி. - 5.534
☆சிஹல உறுமய - 2,760
☆தே.ஐ.மு. - 1,688

## மட்டக்களப்பு மாவட்டம்

### கல்குடா
☆தே.ஐ.மு. - 23,140
☆த.வி.கூ. - 21.425
☆ஐ.தே.க. - 4,098
☆பொ.ஐ.மு. - 1,532
☆சுயேட்சை - 1 - 1,416

## கம்பஹா மாவட்டம்

### கட்டான
☆பொ.ஐ.மு. - 42,316
☆ஐ.தே.க. - 30,157
☆ஜே.வி.பி. - 3,906
☆சிஹல உறுமய - 1,578

## புத்தளம் மாவட்டம்

### புத்தளம்
☆ஐ.தே.க. - 21,579
☆பொ.ஐ.மு. - 20,044
☆தே.ஐ.மு. - 9,711
☆ஜே.வி.பி. - 858
☆பிரஜைகள் முன். - 618

### வென்னப்புவ
☆பொ.ஐ.மு. - 29,146
☆ஐ.தே.க. - 25,218
☆ஜே.வி.பி. - 2,596
☆சிஹல உறுமய - 618

## கேகாலை மாவட்டம்

### எட்டியாந்தோட்டை
☆பொ.ஐ.மு. - 22,659
☆ஐ.தே.க. - 18,738
☆ஜே.வி.பி. - 1,347
☆தே.ஐ.மு. - 331
☆சிஹல உறுமய - 306

### கல்கமுவ
☆பொ.ஐ.மு. - 20,284
☆ஐ.தே.க. - 18.109
☆ஜே.வி.பி. - 2,468
☆சிஹல உறுமய - 556

(10ஆம் பக்கம் பார்க்க)

**பெரும் அநீதி! அச்சுறுத்தல்!!**

# தேர்தலை ரத்துச் செய்ய கோருகின்றது ஐ.தே.க.!

கொழும்பு,ஒக்.12

நீதியற்ற முறையிலும் வாக்காளர்களுக்கு அச்சுறுத்தல் விளைவிக்கும் வகையிலும் நடைபெற்று முடிந்துள்ள தேர்தல் ஜனநாயகப் பண்புகளுக்கு முற்றிலும் முரணானது. எனவே அதனை ரத்துச் செய்துவிட்டு மீள வாக்களிப்பு நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறு அவசர வேண்டுகோள் ஒன்றை தேர்தல் ஆணையாளரிடம் விடுத்துள்ளது ஐக்கிய தேசியக் கட்சி.

இது தொடர்பாக நேற்று அக்கட்சி அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

தேர்தல் மீண்டும் நடத்தப்பட வேண்டும் என்று கோரும் எந்தக் கட்சியுடனும் இணைந்து செயற்பட ஐ.தே.க. தயாராக உள்ளது.

ஊழல் மோசடிகள் மிகுந்த இந்தத் தேர்தலுக்கு ஆதரவளித்து வாக்களித்துள்ள மக்களின் எதிர்கால நலன் குறித்து கவலைப்படும் ஒரே கட்சி என்ற வகையில் தேர்தலை ரத்துச் செய்யுமாறு ஐ.தே.க. கோருகிறது - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தல் கண்காணிப்புக் குழுவின் இடைக்கால அறிக்கை இன்று!

நாடாளுமன்றத் தேர்தலுக்கான கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக வந்திருந்த ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் தமது இடைக்கால அறிக்கையை இன்று தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கவிருக்கின்றனர்.

தேர்தல் இடம்பெற்ற தினத்துக்கு முதல் நாள்வரை தாம் கண்காணித்த விடயங்களை அவர்கள் தமது இடைக்கால அறிக்கையில் தெரிவிப்பார்கள் என்றும் -

இறுதி அறிக்கை அடுத்த வாரத்தில் ஐரோப்பிய ஒன்றியத் தலைமையகத்திடம் இவர்கள் சமர்ப்பிப்பர் என்றும் -

தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

வெளிநாடுகளில் இருந்து வந்த கண்காணிப்பாளர்கள் இன்று முதல் கட்டம் கட்டமாக அவர்களது நாடுகளுக்குத் திரும்புவர். (ஐ-3)

# ஷெல் வீழ்ந்ததும் வாக்குப்பெட்டியுடன் ஓடி ஒளித்த தேர்தல் அலுவலர்கள்!

## கோப்பாய் நிலையத்தில் சம்பவம்

வாக்களிப்பு நிலையத்துக்கு முன்பாக ஷெல் ஒன்று பெரும் சத்தத்துடன் வீழ்ந்து வெடித்தபோது அங்கு கடமையில் இருந்த அலுவலர்கள் வாக்குப் பெட்டியையும் தூக்கிக் கொண்டு பாதுகாப்பான இடத்துக்கு ஓடி ஒளித்தனர். வாக்களிக்க வந்த பொதுமக்களும் சிதறி ஓடினர்.

இச் சம்பவம் செவ்வாய் பிற்பகல் ஒரு மணியளவில் கோப்பாய் நாவலர் வித்தியாலய வாக்களிப்பு நிலையத்தில் இடம்பெற்றது.

இந்த வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்புப் பணிகளைக் கண்காணிப்பதற்கென வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் அடங்கிய குழுஒன்று வாகனத்தில் வந்து இறங்கிய சில நிமிட நேரத்திலேயே ஷெல் விழுந்து வெடித்தது.

பாடசாலைக்கு முன்பாகவுள்ள வயல்வெளியில் ஷெல் வீழ்ந்து வெடித்த போது அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்கள் வாக்குப் பெட்டிகளுடன் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடி ஒளிந்து கொண்டனர். சிறிது நேர பதற்றத்தின் பின்னர் அங்கு வாக்களிப்பு சுமுகமாக இடம் பெற்றது.

வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் ஷெல்வீழ்ந்து வெடித்த இடத்தைப் படம் பிடித்துச் சென்றனர். (ஐ-7-72)

# பதின்மூன்று பெட்டிகளில் ஒரு வாக்குக் கூட இல்லை

யாழ்ப்பாணம்,ஒக்.12

காங்கேசன்துறைத் தொகுதியில் அமைக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்களில் வைக்கப்பட்டிருந்த வாக்குப் பெட்டிகளில் 13 பெட்டிகளில் ஒரு வாக்குக் கூட இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

வாக்களிப்பு நிலையத்தில் இருந்து யாழ்.செயலகத்துக்கு எடுத்து வரப்பட்ட இந்தப் பெட்டிகள் செவ்வாய் இரவு திறக்கப்பட்ட சமயமே அவை வெறுமையாக இருப்பது தெரியவந்தது. (ஐ-3)

# யாழ். மாவட்ட முடிவுகள் - ஒரே பார்வையில்

| கட்சிகள் | ஊர்காவற்றுறை | வட்டுக்கோட்டை | காங்கேசன்துறை | மானிப்பாய் | கோப்பாய் | உடுவில் | பருத்தித்துறை | சாவகச்சேரி | நல்லூர் | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | தபால் வாக்குகள் | இடம்பெயர் வாக்குகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஈ.பி.டி.பி. | 12,311 | 4,869 | 4,068 | 5,737 | 5,044 | 1,662 | 1,862 | 1,256 | 2,560 | 1,571 | 216 | 380 | 135 | 41,671 |
| ஐ.தே.க. | 820 | 2,151 | 524 | 955 | 1,051 | 1,046 | 978 | 913 | 1,523 | 581 | 278 | 74 | 535 | 11,431 |
| ஜே.வி.பி. | 18 | 34 | . 14 | 20 | 27 | 17 | 9 | 7 | 10 | 6 | 0 | 0 | 9 | 172 |
| தேசிய ஐக்கியமுன். | 17 | 28 | 13 | 39 | 24 | 22 | 14 | 5 | 15 | 3 | 0 | 2 | 833 | 1,015 |
| த.வி.கூட்டணி | 1,327 | 4,035 | 4,943 | 5,703 | 4,248 | 4,180 | 1,540 | 1,284 | 3,584 | 1,277 | 119 | 518 | 91 | 32,852 |
| பிரஜைகள் முன். | 22 | 45 | 27 | 42 | 44 | 24 | 29 | 6 | 23 | 13 | 1 | 0 | 51 | 327 |
| புளொட் | 68 | 447 | 254 | 1,067 | 867 | 243 | 705 | 288 | 295 | 471 | 24 | 49 | 79 | 4,857 |
| புதியஇடதுசாரிமுன். | 6 | 1,079 | 152 | 124 | 825 | 73 | 28 | 46 | 83 | 0 | 17 | 0 | 4 | 2,452 |
| மு.ஐ.வி.மு. | 3 | 9 | 3 | 7 | 12 | 5 | 3 | 4 | 4 | 3 | 11 | 0 | 107 | 161 |
| றுகுணு ஜனதா | 8 | 27 | 18 | 24 | 241 | 16 | 10 | 2 | 8 | 3 | 1 | 1 | 0 | 142 |
| லிபரல் கட்சி | 5 | 13 | 12 | 18 | 24 | 13 | 12 | 3 | 8 | 2 | 3 | 0 | 2 | 115 |
| தமிழ் காங்கிரஸ் | 166 | 908 | 331 | 1,160 | 891 | 2,024 | 2,493 | 658 | 1,262 | 394 | 43 | 288 | 30 | 10,648 |
| சிஹல உறுமய | 32 | 38 | 14 | 36 | 37 | 39 | 30 | 14 | 18 | 7 | 0 | 1 | 1 | 267 |
| பூமி புத்திரக் கட்சி | 10 | 14 | 13 | 16 | 21 | 24 | 12 | 9 | 6 | 7 | 2 | 0 | 1 | 135 |
| சுரேஸ் அணி | 26 | 50 | 174 | 634 | 548 | 22 | 19 | 13 | 38 | 114 | 1 | 2 | 16 | 1,657 |
| வரதர் அணி | 223 | 208 | 304 | 872 | 829 | 328 | 118 | 1,043 | 342 | 406 | 138 | 32 | 2 | 4,907 |
| சு.க.அணி | 28 | 143 | 77 | 256 | 241 | 110 | 59 | 66 | 406 | 226 | 1 | 20 | 16 | 1,649 |
| சுயே. 4 | 7 | 14 | 6 | 6 | 17 | 5 | 4 | 0 | 8 | 2 | 2 | 0 | 116 | 187 |
| முஸ்லிம்கள் அணி | 25 | 29 | 14 | 32 | 51 | 30 | 20 | 8 | 24 | 6 | 2 | 1 | 1,992 | 2,234 |
| ரெலோ அணி | 275 | 241 | 43 | 164 | 110 | 782 | 123 | 56 | 98 | 120 | 18 | 28 | 132 | 2,190 |
| மொத்தம் | 15,397 | 14,384 | 11,004 | 16,912 | 14,935 | 10,665 | 8,130 | 5,681 | 10,318 | 52,027 | 851 | 1,396 | 4,152 | 1,19,069 |

# மரண அறிவித்தல்கள்

## D. தேவராசா ஜோன்

கோப்பாய் கிளுவானை ஒழுங்கையைச் சேர்ந்த D. தேவராசா ஜோன் அவர்கள் (இளைப்பாறிய கணக்காளர், சந்தைப்படுத்தும் திணைக்களம்) கொழும்பில் 09—10—2000 திங்கட்கிழமை அன்று மகிமைக்குள் பிரவேசித்து விட்டார்.

அன்னார் செல்வராணியின் (சுட்டி) அன்புக் கணவரும், தாசன், றொசான், ரஞ்சன், சுவீற்றா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
V. V. வரதராசன்

Abey wickrama Road,
Off Hotel Road,
Mountlavinia.

(79366)

## இராமசாமி யோகலிங்கம்

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி யோகலிங்கம்(Computer Engineer) அவர்கள் கனடாவில் 9-10-2000 அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற இராமசாமி, அன்னம்மா (லண்டன்) ஆகியோரின் அன்பு மகனும், சரோஜினி தேவியின் அன்புக் கணவரும், தினேஷ், சரண்யா ஆகியோரின் தகப்பனாரும், முத்துலிங்கம் (டுபாய்), கனகலிங்கம் (பஹ்ரைன்), சிவலிங்கம் (சார்ஜா), மகேஸ்வரி (கொழும்பு), ஞானலிங்கம் (லண்டன்), சோதியலிங்கம் (கனடா), நவரட்ணலிங்கம் (கொழும்பு), நாகேஸ்வரலிங்கம் (லண்டன்) ஆகியோரின் சகோதரரும், இராஜசூரியர், சற்குணகுமாரி, நவமணி, குமுதினி, பிறேமா, புனிதவதி, கௌரி, சிவாஜினி ஆகியோரின் மைத்துனரும் சிவதாயினி, கௌசலன், கிர்த்திகா, சஞ்ஜீவன், றகிதாலைதினி, மேதினி, சுஹாசினி ஆகியோரின் சித்தப்பாவும் கணேஷ், தனேஷ், காயத்திரி, ஸ்ரீராம், கஜனா ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நாளை மறுதினம் (14- 10- 2000) சனிக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி ச. முத்துலிங்கம்

12, சங்கிலியன் வீதி,
நல்லூர்.

(79380)

## துரையப்பா இராசையா

(சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா இராசையா காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும் குணரத்தினம், விசாலாட்சி, காலஞ்சென்ற நாகம்மா, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கந்தசாமி, தெய்வராணி, சண்முகநாதன், தவமணிதேவி (டென்மார்க்), ஆறுமுகம், கதிரமலை (சவுதிஅரேபியா), வேலாயுதம் ஆகியோரின் அன்புத் தந்தையும், முருகையா, சத்தியபாமா, கேதாரேஸ்வரி காலஞ்சென்ற சிவஞானம் (டென்மார்க்), விமலாதேவி, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-10-2000) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்-:
வேலாயுதம்
(மகன்)

ஆஸ்பத்திரி வீதி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

(79389)

## செல்லையா பரஞ்சோதி

குமரகோட்டம் கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பரஞ்சோதி நேற்று (11-10-2000) காலமானார்.

அன்னார் செல்லையா - அன்னமுத்து தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற மயில்வாகனம் (சின்னராசா) - சிவபாக்கியத்தின் அன்பு மருமகனும் இரத்தினபூபதியின் அன்புக் கணவரும், மதிவதனா (ஆசிரியை, கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்), கோகிலவதனி (வெளிவாரிப் பட்டப் படிப்பு, யாழ். பல்கலைக்கழகம்), சதீஸ்கரன் (கலைப்பீட மாணவன், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற செல்லத்துரை, இரத்தினம் அகியோரின் அன்புச் சகோதரரும் தங்கவேல், அம்பிகாதேவி, சிவசுந்தரம், பாலசுந்தரம், பாலகுமார் ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும் பரமநாதன், சிவசுப்பிரமணியம், இந்திரலீலா, மோகனலீலா, சகுந்தலா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12-10-2000) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் காரைக்கால் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
- குடும்பத்தினர்

குமரகோட்டம்,
கோண்டாவில்.

(79382)

## தவணைப் பரீட்சை

வலிகாமம் தெற்கு, ஒக். 12

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளின் மூன்றாம் தவணைப் பரீட்சைகள் இவ்வருடம் வலய ரீதியாக நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

தரம் மூன்று தொடக்கம் 11 வரையான வகுப்புகளுக்கு பரீட்சையை நடத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வலிகாமம் கல்வி வலயத்தில் 11 ஆம் தரத்துக்கான தவணைப் பரீட்சைகள் அடுத்த மாதம் முதல் வாரத்திலும்—

3 தொடக்கம் 10ஆம் தரம் வரையான வகுப்புகளுக்குரிய பரீட்சைகள் அடுத்த மாதம் இறுதி வாரத்திலும் நடைபெற உள்ளன.

தேவையான வினாத்தாள்களின் எண்ணிக்கையை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன் வகுப்பு ரீதியாக தயாரித்து அனுப்புமாறு அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (3-152)

## திரைப்படக் காட்சி

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள திரைப்படக் காட்சித் தொடரில் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாரதிவாசுவின் 'பன்னீர் புஸ்பங்கள்' வீடியோக் காட்சியாக இடம் பெறும்.

பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் இடம் பெறவுள்ள இந்த வீடியோப் படக் காட்சியில் ஆர்வமுள்ளவர்களைக் கலந்து கொள்ளுமாறு இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் கேட்டுள்ளார். (ஐ-7)

## குருபூசை தினம்

சுந்த சிவசமரச சன்மார்க்க சாது சங்க சமாதி குரு பீட தருமகர்த்தா சபையினால் மௌன குரு முருகுப்பிள்ளை கடவுள் சுவாமிகளின் 21 ஆவது குருபூசைத்தினம்இன்று வியாழக்கிழமை காலை10.00 மணிக்கு உடுவில் கிழக்கு கடவுள் சுவாமிகளின் சந்நிதியில் கொண்டாடப்படவுள்ளது. (ஐ-ரி)

## செயலமர்வு

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)மாணவர்களுக்கான விசேட கணித, விஞ்ஞான செயற்றிட்டம் தொடர்பான கருத்தரங்கும் செயலமர்வும் எதிர்வரும் 15 ஆம் திகதி மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

(3-152)


சிந்து திரையரங்கு
உரும்பிராய் சந்தி
சூரியா, ஜோதிகா, சிவகுமார், ரகுவரன் நடித்த
உயிரிலேகலந்தது
(குடும்பச் சித்திரம்)
10-30, 3-00 (ப.நே)
(சி/13362)

இன்றைய வீடியோ CD வெளியீடு
பிரேம், குஷ்பு
குரோதம் - 2
(பிரதிகளை உடன்பெற்றுக்கொள்ளலாம்)
ஒடியோ CD வெளியீடு
A. R. ரகுமானின்
தெனாலி
மூர்த்தி வீடியோ
மானிப்பாய்,
(சி/ 13344)


## வாழ்த்துகின்றோம்

யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்
சாவகச்சேரியின் முன்னாள் ஆசிரியர்
அராலியூர்

### ந. சுந்தரம்பிள்ளை

(B. A. Dip - in Edu.)

அவர்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட நாடகப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டமைக்காக அவரின் மாணவர்களாகிய நாங்கள்பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மேடை நாடகம், வானொலி நாடகத் துறையில் பேரும் புகழும் பெற்ற எமது ஆசானின் இலக்கிய ஆக்கங்கள் மென்மேலும் சிறப்புற்று விளங்கவும், சமுதாயத்தில் புதிய சீர்திருத்தங்களை ஏற்படுத்தவும் யாம் மனதார வாழ்த்துகின்றோம். இன்று நாடக ஆசிரியர் வரிசையில் அவர் உரிய கணிப்பையும் இடத்தையும் பெற்றுத் திகழ்வதையிட்டுப் பெருமையும் அடைகின்றோம்.

திரு. மு. பாலசுப்பிரமணியம் - அதிபர்
சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்
சாவகச்சேரி.

திரு. சுப்பிரமணியம் - அதிபர்-
மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், சாவகச்சேரி.

திரு. மயில்வாகனம் - அதிபர் -
மட்டுவில் தெற்கு, அ. மி. த. க. பாடசாலை
சாவகச்சேரி.

திரு. செ. சிவஞானம் - அதிபர் -
கல்வயல் சண்முகானந்தா வித்தியாலயம்,
சாவகச்சேரி.

(சி/13349)

## பிரார்த்திக்கின்றோம்

### அமரர் ஐயாத்துரை துரைராஜா (அதிபர்)

எமது பாடசாலையின் சகல செயற்பாடுகளிலும் எம்மோடு ஒத்துழைப்பு நல்கி செயற்பட்ட

வண்ணை நாவலர் ம.வி. அதிபர்
ஐயாத்துரை துரைராஜா

அவர்களின் திடீர் மறைவை அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைவதோடு, துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அமரரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பாடசாலைச் சமூகம்.
யா / சன்மார்க்க ம.வி.

(சி/13345)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் ஐயாத்துரை துரைராஜா B. Com.

(அதிபர், நாவலர் மகா வித்தியாலயம்)

09- 10- 2000

தஞ்சமென வந்த எமக்குத்
தங்க இடம் தந்தீரே.
வெம்புகின்றோம் நாமிங்கே
எங்குதான் சென்றீரோ - எம்
நெஞ்சிருக்கும் வரை உம் நினைவிருக்கும்!

அவரது திடீர் மறைவு கேட்டு துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்.
யா/ கொழும்புத்துறை,
இந்து மகா வித்தியாலயம்.

(79371)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் ஐயாத்துரை துரைராஜா அவர்கள்

(அதிபர்: வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்,
உப தலைவர், இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்க
யா. கிளை)

நிலமதிரா மென்நடையும்
இதழகலா புன்னகையும்
நினைவகலா கண்ணியமும்
நெஞ்சகலா மறுக்குதையா!

எமது நண்பருக்கு கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைவதாக!

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்,
யாழ். கிளை.

(79379)

# அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

இளவாலை புனித யாகப்பர் ஆலய பொது நிலையினர் கழகத்தால் நடத்தப்பட்ட யூபிலி ஆண்டுக் கண்காட்சியை முன்னிட்டு மேற்படி ஆலய இளையோர் மன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் போது பரிசு பெற்ற இலக்கங்கள் பின்வருமாறு:-

**1 ஆம் பரிசு - 9233  2 ஆம் பரிசு - 3542**
**3 ஆம் பரிசு - 530  4 ஆம் பரிசு - 4011**

ஆறுதல் பரிசுகள்:- 9251, 9240, 6064, 8570, 4562, 8693.

★ 15—10—2000 தொடக்கம் 29—10—2000 வரை காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை பங்குப் பணிமனையில் சீட்டு இலக்கத்துடன் வந்து பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம். 29-10-2000 இன் பின்னர் பெற்றுக் கொள்ள முடியாது.

பங்குத்தந்தை,
இளவாலை.

(79369)

# வாடகை

01. இல. 165, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் வணிகர் கழகக் கட்டடத்தின் மேல் மாடி 1,750 சதுர அடி (அலுவலகப் பாவனைக்கு உகந்தது) வாடகைக்கு விடப்படும். அதனை வாடகைக்குப் பெற விரும்புவோர் அலுவலக நேரத்தில் அதனைப் பார்வையிட்டு 20-10-2000 இற்கு முன் எழுத்து மூலம் எமக்கு விண்ணப்பிக்கவும்.

## விற்பனைக்கு

02. இல. 165, மானிப்பாய் வீதியில் உள்ள யாழ்ப்பாணம் வணிகர் கழகக் கட்டடத்தில் பாவிக்கப்பட்ட கதவுகள், யன்னல்கள், கதவு நிலைகள், இரும்புக் கிறில்கள், 2'' X 2'' கம்பி வலைகள், வெற்று சீமெந்து உறைகள், அரைக்கும் ஆலைக்குப் பயன்படுத்தும் மெயின் கவிச் ஆகியன விற்பனைக்குண்டு. 13-10-2000 தொடக்கம் 20-10-2000 வரை அவற்றைப் பார்வையிட்டு 21-10-2000 அன்று பன்னிரண்டு மணிக்கு முன் கூறுவிலை சமர்ப்பிக்கவும்.

தலைவர்
யாழ். வணிகர் கழகம்

(சி/13338)

# 16 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
## இராமலிங்கம் அப்பையா
(ஓய்வு பெற்ற O. I. C, நீர்ப்பாசனத் திணைக்களம், மேற்பார்வையாளர், மாதுறு ஓயா கனேடியத் திட்டம்)

தோற்றம் 28-03-1924  மறைவு 26-09-2000

வாசலில் இருந்தெமக்கு துணையாய் நின்றீர்கள்
பாசமுடன் வழிநடத்த துணையார் இனி எமக்கு?
பப்பா பப்பா எனச் சுற்றத்தார் கூறியழைக்க
பரிதவிக்க எம்மைவிட்டு நெடுவழி சென்றதேனோ?
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இன்று (12—10—2000) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

01, புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு,
கல்வியன்காடு.
(79316)

# சேவைக்கால செயலமர்வு

வலிகாமம் தெற்கு, ஒக். 10
வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளில் தரம் 10, 11 இல் மனைப்பொருளியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்கால கருத்தரங்கு, செயலமர்வு என்பன எதிர்வரும் 15, 21 ஆம் திகதிகளில் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெறும். (3-152)

# கெயர் உதவி

நெல்லியடி ஒக். 12
கடந்தமூன்று மாதங்களுக்கு முன், தென்மராட்சிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வடமராட்சிப் பகுதியில் தஞ்சமடைந்தவர்களுள் 56 குடும்பங்களுக்கு, கெயர் நிறுவனம் குடிசைகளை அமைத்து வருகின்றது.

துன்னாலை வடக்கில் 20 குடிசைகளும், கற்கோவளத்தில் 21 குடிசைகளும், சிங்கை நகரில் 15 குடிசைகளும் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், வடமராட்சிப் பகுதியில் 46 குடிசைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாக, கெயர் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-3-109)

# மீண்டும் கோபால் காட்டுக்குள் சென்றார்

சென்னை, ஒக். 12
நடிகர் ராஜ்குமார் உட்பட பணயம் வைக்கப்பட்டுள்ள இருவரது விடுதலை தொடர்பாக சந்தனமரக் கடத்தல் காரன் வீரப்பனுடன் பேச்சு நடத்த தமிழக கர்நாடக அரசுகளின் தூதராக நக்கீரன் பத்திரிகை ஆசிரியர் கோபால் கடந்த திங்கட்கிழமை காட்டுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார். (ஒ-8)

# திருட்டு முயற்சி முறியடிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 12
இரவு நேரங்களில் எச்சரிக்கையாக இருந்து வந்த ஊரவர்களினால் ஒரு வீட்டில் நடக்கவிருந்த திருட்டு முயற்சி முறியடிக்கப்பட்டது.

கரவெட்டி கிழக்கில் கடந்த சனியன்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சி. செல்லத்தம்பி என்பவரின் வீட்டில் நடக்கவிருந்த திருட்டே முறியடிக்கப்பட்டுள்ளது.

நள்ளிரவு 1.30 மணிக்கு மதில் ஏறிக்குதித்த திருடர்களின் அரவம் கேட்டு விழித்த வீட்டுக்காரர் கூச்சலிட்டதை அடுத்து திருடர்கள் தப்பிச் சென்றனர். (இ-15)

## புலமைப்பரிசில் - 2001

தற்போது தரம் 4 கற்கும் மாணவர்களுக்கான
வகுப்புகள் ஆரம்பம்
**14 - 10 - 2000**
காலை 8-00 மணி

★ வாராந்த பயிற்சிப் பரீட்சைகளுடன் மாதாந்த ஊக்குவிப்புக் கையேடுகளும் வழங்கப்படும்.

**Bond,** யாழ். நகர்
(79377)

## ஸ்ரீ செல்வா

திரையில்
ஸ்ரான்லி வீதி
தினசரி 10-30, 2-30
(பழைய நேரம்)
சூரியா, ஜோதிகா,
நடிக்கும்
**உயிரிலே கலந்தது**
(CD பிரதி புதிய வெளியீடு)
(79388)

## யா/உசன் இராமநாதன் ம. வி
## O/L மாணவர், ஆசிரியர் கவனத்திற்கு

16 - 10 - 2000 அன்று சங்கீதம், விவசாயம், மனையியல் பாட செய்முறைப் பரீட்சை நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்ட மாணவர், ஆசிரியர் சமுகம் கொடுக்கவும்.

பரீட்சை நேரம் 1-30
நடைபெறும் இடம்:- யா/நெல்லியடி ம.ம.வி
நெல்லியடி,
கரவெட்டி.

(79279)

# கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் சக ஊழியர்
திரு. வே. ரஜேந்திரன்
அவர்களின் அன்புத் தந்தை

## அமரர் வல்லிபுரம் வேலாயுதபிள்ளை

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை, மல்லாகம்.

(சி/13339)

# கண்ணீர் அஞ்சலி

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
திருப்பணிச் சபை செயலாளரும்
வண்ணை நாவலர் வித்தியாலய அதிபருமான
அமரர்

## ஐயாத்துரை துரைராஜா

அவர்களின் அகால மரணத்தினால் ஆழ்ந்த கவலை அடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சி. முத்துக்குமாரு & சன்ஸ்
175, K. K. S. றோட்,
யாழ்ப்பாணம்.

ராஜ்வரன் அன்கம்பனி
இரும்பு வியாபாரம்
325, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

Jegatha Hardwares
321, Kankesanthurai Road,
Jaffna.

நந்தகோபாலன் றேடேஸ்
272, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

திருச்செந்தூரான் றேடிங் கம்பனி
315, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(79372)

# 33 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 02 — 08 — 1929
மறைவு 10 — 09 — 2000

## அமரர் Dr. நாகரத்தினம் வாமதேவன்

B. Sc [Hons] D. I. M. S.
(முன்னாள் அதிபர் ஸ்ரீலங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி)

பாசத்தின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய் எமக்கெல்லாம் வழிகாட்டியாய் இருந்த நீங்கள் எங்களைவிட்டுப் பிரிந்து நாள்கள் முப்பத்தி மூன்று சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சமதில் என்றும் நீங்காதிருக்கும்.

உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
மனைவி, மகள், மருமகன்

நிரந்தர முகவரி
71A, புங்கன்குளம் வீதி,
கொழும்புத்துறை.

யோகஸ்தான்,
மானிப்பாய் தெற்கு.
(79340)

# உதயன்

## ஊமை நாடகம்

இப்பத்திரிகை எழுதும்போது தேர்தல் முடிவுகள் உத்தியோகபூர்வமாக வெளிவரவில்லை. தொகுதிவாரியான தேர்தல் முடிவுகளே அறிவிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. அவற்றை வைத்துத் தேர்தல் முடிவுகளை ஆய்வு செய்வதோ பெறுபேறுகளை விமர்சிப்பதோ உகந்தது அல்ல.

தென்னிலங்கைத் தேர்தலில் வன்செயல்கள் கட்டுமீறிப் போனதைச் சுட்டிக் காட்டி, தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு நிலையம் இடைக்கால அறிக்கை ஒன்றை நேற்று முன்தினம் வெளியிட்டிருந்தது.

அதில் குறிப்பிடப்பட்டிருந்த ஓர் அம்சம் கவனத்தை ஈர்த்தது.

யாழ்ப்பாணத்தில் இராணுவத் தாக்குதல்களின் மத்தியில் தேர்தல் நடத்தப்பட்டதனாலும், வடக்கு—கிழக்கில் உள்ள 'விடுவிக்கப்படாத பிரதேசங்கள்' என்று நாமம் சூட்டப்பட்ட பகுதிகளில் உள்ள சுமார் இரண்டரை லட்சம் தமிழ் மக்களின் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டதனாலும்—

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் நடத்தப்பட்ட தேர்தலானது வாய்ச் சாவியைக் கொண்டு பொம்மை ஊஞ்சலில் விளையாடும் கேலிக் கூத்துப் போன்றதாகும் — என்று அந்த அறிக்கை விமர்சிக்கிறது. அதாவது ஊமைத்தனமான கேலி நாடகமே வடக்கு—கிழக்கு மாகாணத்தில் நடத்தப்பட்ட தேர்தல் என்று கண்காணிப்பு நிலைய அறிக்கை கண்டிக்கிறது.

பொதுத் தேர்தல் என்பது நாட்டின் எல்லாத் திக்குகளிலும் திசைகளிலும் நடத்தப்பட்டாலே முழுமையானது என்று கொள்ளலாம். விடுவிக்கப்படாத பிரதேசம் என்று தான் பெயர் சூட்டியுள்ள பகுதிகளில் வாழும் தமிழர்கள், தனது குடிமக்கள் அல்லர் என்று கருதியே அவர்களின் பகுதிகளில் தேர்தல் நடத்தப்படவில்லை என்ற வாதத்தில் அரசு எவ்வாறு தவறு காணமுடியும்?

நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தால் தமிழ் மக்களுக்கு எதுவும் ஆகப்போவதில்லை என்பது புலிகளின் கொள்கை.

அவர்கள் வசம் உள்ள பகுதிகளில் தேர்தலை நடத்த இயலவில்லை என்றால், அதே வன்னிப் பகுதியின் ஏனைய பகுதிகளில் தேர்தலை நடத்துவது ஏற்புடையதா? பொருத்தமானதா?.

அரசு அவ்வாறு செய்தால், விடுவிக்கப்படாத பிரதேசங்கள் என்று பெயர் சூட்டப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களை கொழும்புக்கு அரசு தனது பிரஜைகள் அல்லர் என்று கருதுவதாகவே கொள்ள வேண்டியதாகிறது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகள் மூலம் அங்கு வாழும் மக்கள் இலங்கையின் பிரஜைகள் அல்லர் என்று ஏற்கனவே காட்டி வருகிறது. அதனைப் பொதுத் தேர்தல் மூலம் மேலும் ஊர்ஜிதம் செய்து உறுதிப்படுத்தி உள்ளது.

போரின் மத்தியில் குடாநாட்டில் தேர்தல் நடத்துவது வெறும் கேலிக் கூத்து; சர்வதேசத்தின் கண்ணில் மண்ணைத் தூவி, யாழ்ப்பாணத்தில் தேர்தலை நடத்தக் கூடிய அளவுக்கு அமைதி நிலவுகிறது என்று நம்பச் செய்வதே சந்திரிகவின் நோக்கம். இதனை ஏற்கனவே இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருக்கிறோம்; தேர்தல் நடைபெற்றது மட்டுமல்ல தென்னிலங்கைக் கட்சிகள் கூட அங்கு போட்டியிட்டன என்று 'பெருமை' பேசுமளவுக்கு குடாநாட்டு மக்கள் மீது தேர்தலைத் திணித்து விட்டார் ஜனாதிபதி. அந்த வகையில் அவர் படலே கெட்டிக்காரி! தமிழ் அரசியல்வாதிகளோ...?

# சுதந்திரமான தேர்தலுக்கு அவசர காலச் சட்டம் தடை

## தேர்தல் கண்காணிப்புக்குழுவுக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஒக். 11

அவசரகாலச் சட்டம் அமுலில் உள்ள சமயத்தில் நாடாளுமன்றத் தேர்தல் இடம் பெறுவது, மக்கள் சுதந்திரமாகத் தமது கருத்துக்களைப் பரிமாறத் தடையாக உள்ளதாக யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தெரிவித்துள்ளது.

குடாநாட்டில் நீதியானதும், நேர்மையானதுமான தேர்தலை நடத்தும் சூழ்நிலையைச் சீர்குலைக்கும் காரணிகள் குறித்து, ஐரோப்பிய கமிஷனின் தேர்தல் கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

இடப்பெயர்வுகள் மற்றும் போக்குவரத்து வசதியீனங்கள், வாக்களிக்கும் முறை தொடர்பான தெளிவின்மை ஆகியவை மக்களை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளன.

வாக்காளர் பட்டியலில் ஏற்பட்டுள்ள குளறுபடிகளும் குறிப்பிட்ட சில அரசியல் கட்சிகள் ஆயுதங்களுடன் நடமாடுவதும் குடாநாட்டில் தேர்தலில் வாக்களிக்கப் பொது மக்களுக்கு தடை ஏற்படுத்துகிறது.

அத்துடன் தேடுதல் நடவடிக்கைகள் மற்றும் திடீர்க் கைதுகள் மக்களுக்கு அச்சவுணர்வை ஏற்படுத்தியுள்ளன.

நிவாரண உதவிகள் வழக்கமான இடங்களைத் தவிர்த்து குறிப்பிட்ட ஓர் அரசியல் கட்சியின் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படுவது ஒரு தலைப்பட்சமான சாதகத்தை அக்கட்சிக்கு ஏற்படுத்தும் நிலையை உருவாக்கியுள்ளது.

இப்படி யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தெரிவித்துள்ளது.

(இ-௭)

## தீபாவளி முற்பணம்

யாழ்ப்பாணம், ஒக். 12

சுகாதாரத் திணைக்களத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு தீபாவளியை ஒட்டி பண்டிகை முற்பணம் வழங்கப்படவுள்ளது

இதற்கென விண்ணப்பப் படிவம் விநியோகிக்கப்பட்டு ஆயிரத்து 500 ரூபா முற்பணம் வழங்கப்படவுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரி பணியாளர்களுக்கும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகிறது. (ஐ 139-17)

## வன்னியில் பாம்புக்கடி அதிகரிப்பு

கடந்த இரண்டு நாள்களில் பாம்புக்கடிக்கு உள்ளான நால்வர் மல்லாவி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தனங்காமம், ஒலுமடு மாங்குளம், விநாயகபுரம், துணுக்காய் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே பாம்புக்கடிக்கு உள்ளானவர்கள் எனத் தெரியவருகிறது.

(இ-8)


**வெங்காயம் புகையிலை ஏற்றுவோர் கவனத்திற்கு**

தற்போது சிமெந்து இறக்கிக் கொண்டிருக்கும் கெந்தல கப்பலில் வெங்காயம், புகையிலை போன்ற பொருள்களை ஏற்ற விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

**ஜெசிபா ஏஜென்சி**

132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/13350) T. P. 2407


**இதயாஞ்சலி**

எமது கல்வி நிறுவன ஆசிரியைகளான

செல்விகள் மதிவதனா, கோகிலவதனி

ஆகியோரின் அன்புத் தந்தை

**அமரர் பரஞ்சோதி**

அவர்களின் பிரிவால் துயருறும் ஆசிரியைகளுக்கும் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்கள் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நியூட்டன் அக்கடமி

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(79385)

**இதய அஞ்சலி**

எமது அயல் பாடசாலையாகிய

வண்ணை நாவலர் வித்தியாலய அதிபர்

**ஐயாத்துரை துரைராஜா**

அவர்களின் அகால மரணச்செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தோம். அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் கவலையையும் தெரிவிக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்

(79391)

# கத்தி, பொல்லுகளுடன் கோஷ்டி அட்டகாசம்

## கலட்டியில் 3 இளைஞர்கள் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ்ப்பாணம் கலட்டிப் பகுதியில் நேற்று மாலை தமிழ் கட்சி ஒன்றின் பெயரைக் கூறிக்கொண்ட கோஷ்டி ஒன்று அப்பகுதி இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கத்தி, பொல்லுகள், கம்பிகள், அலவாங்குகள் கொண்டு நடத்தப்பட்ட இத்தாக்குதலில் எட்டு இளைஞர்கள் வரை காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் நேற்று மாலை வரை மூன்று பேர் மட்டும் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

கலட்டியைச் சேர்ந்த என். பாலசுந்தரம் (வயது 37), எஸ். தர்மேந்திரா (வயது18) எஸ். ஜெரோகன் (வயது 15) ஆகியோரே காயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

## ஆறுமுகநாவலர் குருபூசையை ஒட்டிய போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ். சைவபரிபாலன சபையினர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் குருபூசைதினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளனர்.

ஆறுமுகநாவலர் தொடர்பான மேற்படி போட்டியில் தரம் 12, 13 மாணவர்கள் பங்குபற்ற முடியும்.

எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள இந்தப் போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி இம் மாதம் 20 ஆம் திகதியாகும்.

இதேவேளை —

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசை தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் பேச்சுப் போட்டிகள் அடுத்த மாதம் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு மற்றும் மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தப்படும் இந்தப் போட்டிகளில் பாடசாலை மாணவர்கள் பங்கு பற்றுவர் என சைவ பரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் வைத்திய புலவர் வ. கந்தசாமி தெரிவித்தார். (ஐ 7)

**உதய வாக்கு**

பல இயல்பு வாய்ந்த நண்பர்களின் தொடர்பை விட தேர்ந்தெடுத்த சில நூல்களின் உறவு நமக்கு மிகப் பயன் அளிக்கும்.

— *பாரதி காஸ்டன்*

**நாளை**

புரட்டாதி 27

வெள்ளிக்கிழமை

திதி: பூரணை

பிற்பகல் 2 - 59 வரை.

நட்சத்திரம்: ரேவதி

முன்இரவு: 10. 04 வரை

பூரணை விரதம்

சுபநேரம்: 06.02—07.32

ராகுகாலம்: 10.32— 12.02

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)


**இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்.**

புத்தளம் சிமெந்து கொம்பனியால் சந்தைப்படுத்தப்படும் தரமான

சங்ஸ்தா (SAMSTHA) சிமெந்து

எம்மிடம் விற்பனைக்கு உண்டு.

சங்ஸ்தா (Samstha) சிமெந்து BS 12, SLS 107 ஆகிய தரத்தில் அமைவானது.

பைக்கற் ஒன்றின் சில்லறை விலை ரூபா 540/

200 பைக்கற்றுக்கு மேல் ஒரே முறையில் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவுகள் உண்டு.

மேலதிக விபரங்களுக்கு எமது காரியாலயத்தின் விற்பனை அதிகாரியுடன் தொடர்பு கொள்ளவும்.

பொறுப்பதிகாரி,
விற்பனைப்பகுதி.

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்,
65, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்

(சி/13353)



**லாலா சோப் ஸ்தாபனத்தாரின் வாழ்த்துகள்**

மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்

தலைவர், முகாமையாளர், களஞ்சியப் பொறுப்பாளர், கிளை முகாமையாளர், உதவியாளர்கள் அனைவரும்

எமது லாலா சோப் உற்பத்திக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து மனமுவந்து கொள்வனவு செய்து விற்பனை செய்கின்றார்கள். இவர்களுக்கு எமது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

**லாலா சோப் தொழிற்சாலை,**

அச்சுவேலி.

(சி/13360)

# மாவட்ட ரீதியாக பிரதான கட்சிகளின். நிலை

மாவட்ட ரீதியாக முக்கிய கட்சிகள் பெற்ற வாக்குகளினதும் கிடைத்த ஆசனங்களினதும் விவரம் வருமாறு:

| கட்சி | மொத்தவாக்கு | ஆசனம் |
|---|---|---|
| **திகாமடுல்ல மாவட்டம்** | | |
| பொ.ஐ.மு. | - 136,423 | - 4 |
| ஐ.தே.க. | - 101,628 | - 2 |
| சுயேச்சை - 2 | - 19,812 | - 1 |
| **மொனராகல மாவட்டம்** | | |
| பொ.ஐ.மு. | - 91,404 | - 3 |
| ஐ.தே.க. | - 75,900 | - 2 |
| ஜே.வி.பி. | - 13,150 | - – |
| **களுத்துறை மாவட்டம்** | | |
| பொ.ஐ.மு. | - 255,175 | - 5 |
| ஐ.தே.க. | - 217,215 | - 4 |
| ஜே.வி.பி. | - 38,378 | - 1 |
| **மாத்தளை மாவட்டம்** | | |
| பொ.ஐ.மு. | - 1,10,213 | - 3 |
| ஐ.தே.க. | - 91,836 | - 2 |
| ஜே.வி.பி. | - 10,673 | – |
| **இரத்தினபுரி மாவட்டம்** | | |
| பொ.ஐ.மு. | - 2,44,142 | - 6 |
| ஐ.தே.க. | - 2,04,017 | - 4 |
| ஜே.வி.பி. | - 22,222 | -- |
| **கம்பஹா மாவட்டம்** | | |
| பொ.ஐ.மு. | - 4,70,018 | - 10 |
| ஐ.தே.க. | - 3,78,328 | - 7 |
| ஜே.வி.பி. | - 73,110 | - 1 |
| **பொலநறுவ மாவட்டம்** | | |
| ஐ.தே.க. | - 82,399 | - 3 |
| பொ.ஐ.மு. | - 80,023 | - 2 |
| **அம்பாந்தோட்டை மாவட்டம்** | | |
| ஐ.தே.க | - 1,19,074 | - 4 |
| பொ.ஐ.மு. | - 1,10,308 | - 2 |
| ஜே.வி.பி. | - 42,042 | - 1 |
| **புத்தளம் மாவட்டம்** | | |
| பொ.ஐ.மு. | - 1,38,747 | - 5 |
| ஐ.தே.க. | - 1,18,566 | - 3 |
| **கொழும்பு மாவட்டம்** | | |
| ஐ.தே.க. | - 4,40,684 | - 10 |
| பொ.ஐ.மு. | - 3,94,146 | - 8 |
| ஜே.வி.பி. | - 78,133 | - 2 |
| **காலி மாவட்டம்** | | |
| பொ.ஐ.மு. | - 2,64,601 | - 5 |
| ஐ.தே.க. | - 2,12,055 | - 5 |
| ஜே.வி.பி. | - 41,620 | - 1 |
| **பதுளை மாவட்டம்** | | |
| ஐ.தே.க. | - 1,67,357 | - 5 |
| பொ.ஐ.மு. | - 1,54,172 | - 3 |
| **அநுராதபுரம் மாவட்டம்** | | |
| பொ.ஐ.மு. | - 1,69,424 | - 5 |
| ஐ.தே.க. | - 1,44,662 | - 3 |
| **மாத்தறை மாவட்டம்** | | |
| பொ.ஐ.மு. | - 2,03,690 | - 5 |
| ஐ.தே.க. | - 1,46,855 | - 2 |
| ஜே.வி.பி. | - 38,757 | - 1 |
| **நுவரெலியா மாவட்டம்** | | |
| பொ.ஐ.மு. | - 1,58,018 | - 4 |
| ஐ.தே.க. | - 1,26,486 | - 3 |
| **திருகோணமலை மாவட்டம்** | | |
| பொ.ஐ.மு. | - 53,860 | - 3 |
| ஐ.தே.க. | - 46,700 | - 1 |
| த.வி.கூ. | - 14,090 | — |
| ஈ.பி.டி.பி. | - 4,524 | — |
| காங்கிரஸ் | - 3,748 | — |
| ம.வி.முன்னணி | - 3,301 | — |
| சுயேச்சை 2 | - 2,621 | — |
| சுயேச்சை 3 | - 1,434 | — |
| சுயேச்சை 6 | - 872 | — |
| ரெலோ | - 498 | — |
| **மட்டக்களப்பு மாவட்டம்** | | |
| த.வி.கூ. | - 54,448 | - 2 |
| தே.ஐ.முன்னணி | - 53,636 | - 1 |
| ஐ.தே.க. | - 29,165 | - 1 |
| பொ.ஐ.மு. | - 16,510 | - 1 |
| **கேகாலை மாவட்டம்** | | |
| பொ.ஐ.மு. | - 2,01,114 | - 5 |
| ஐ.தே.க. | - 1,75,627 | - 4 |
| ஜே.வி.பி. | - 22,028 | — |
| தே.ஐ.மு. | - 4,797 | — |
| சிஹல உறுமய | - 4,549 | — |
| **குருநாகல் மாவட்டம்** | | |
| பொ.ஐ.மு. | - 3,58,794 | - 8 |
| ஐ.தே.க. | - 3,32,623 | - 6 |
| ஜே.வி.பி. | - 40,780 | - 1 |
| **வன்னி மாவட்டம்** | | |
| ரெலோ | - 21,705 | - 3 |
| தே.ஐ.மு. | - 15,837 | - 1 |
| ஐ.தே.க. | - 11,545 | - 1 |
| பொ.ஐ.மு. | - 7,837 | - 1 |
| புளொட் | - 6,961 | — |
| த.வி.கூ. | - 4,643 | — |
| சுயேச்சை 4 | - 3,511 | — |
| சுயேச்சை 2 | - 2,414 | — |
| சுயேச்சை 7 | - 2,359 | — |
| சுயேச்சை 5 | - 1,819 | — |
| ஈ.பி.டி.பி. | - 1,370 | — |
| பிரஜைகள் முன்னணி | - 1,133 | — |
| அ.இ.த.காங்கிரஸ் | - 721 | — |
| ம.வி.முன்னணி | - 444 | — |
| இ.தொ.காங்கிரஸ் | - 325 | — |

## மற்றொரு தமிழரும் நாடு கடத்தல்

பொன்,ஒக்.12

ஜேர்மனியில் இருந்து நேற்றும் இலங்கைத் தமிழர் ஒருவர் நாட்டுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

ஜேர்மனியில் இருந்து தம்மை திருப்பி அனுப்ப வேண்டாம் எனக் கோரி அண்மையில் சாகும் வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்களில் ஒருவரான தம்பிராசா மருதீஸ்வரன் என்பவரே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

சாகும் வரை உண்ணாவிரம் இருந்தவர்களில் இருவர் கடந்த வாரம் திருப்பி அனுப்பப்பட்டது தெரிந்ததே.

## எம்.பிக்கள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் அ.விநாயகமூர்த்தியும் -

அவரவர் பெற்ற விருப்பு வாக்குகளின் அடிப்படையில் எம்.பியாவது பெரும்பாலும் நிச்சயமாகியிருப்பதாகத் தெரிகின்றது.

ஈ.பி.டி.பி. கட்சியில் விருப்பு வாக்கு அடிப்படையில்முதல் நான்கு இடங்களைப் பெற்று எம்.பிக்களாக அறிவிக்கப்படப்போகின்ற நால்வர் யார் என்பது விருப்பு வாக்குகளை எண்ணும் பணி இன்று பூர்த்தியாகும் போது தெரியவரும். (உ)

## சொற்ப வாக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விருப்பு வாக்குகள் எண்ணும் பணி நேற்று முற்பகலில் ஆரம்பிக்கப்பட்ட போது ஜோசப்பரராஜசிங்கம் தமது கட்சியில் மூன்றாவது இடத்தில் பின்தங்கியிருந்தார். இதனால் அவர் எம்.பி பதவியை தக்க வைப்பது சாத்தியமற்றது என முதலில் செய்திகள் வெளியாகின. அது பற்றிய விவரம் நேற்றைய உதயனின் விசேட பதிப்பிலும் இடம்பெற்றிருந்தது.

எனினும் விருப்பு வாக்கு எண்ணி முடிகின்ற சமயத்தில் அவர் இரண்டாவது இடத்துக்கு வந்து தமது பதவியைத் தக்க வைத்துக் கொண்டார். கூட்டணியில் நிமலநாயகம் சௌந்தரநாயகம் 15,894 விருப்பு வாக்குகளையும் ஜோசப் பரராஜசிங்கம் 12,493 விருப்பு வாக்குகளையும், முன்னாள் எம்பியான எஸ்.செல்வராஜா 11,646 விருப்பு வாக்குகளையும் பெற்றனர். (உ-3)

## கட்சிகள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாரி முன்னணி ஆகியனவும் தோல்வியைச் சந்தித்தன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் எஸ்.பி.திஸநாயக்க தமது தொகுதியில் 22 ஆயிரத்து 400 பெரும்பான்மை வாக்குகளால் வென்றார். ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறள தனது தொகுதியில் மண் கவ்வினார். ஐ.தே.க., பொ.ஐ. முன்னணி ஆகியவற்றின் முக்கிய பிரமுகர்கள் வேறு சிலரும் தோல்வியையே சந்திக்க நேர்ந்தது.

வாசுதேவ நாணயக்கார, விக்கிரமபாகு கருணரட்ண,சிஹல உறுமயவின் தலைவர் எஸ்.எல்.குணசேகர, திலக் கருணாரட்ன, சம்பிக ரணவக்க ஆகியோரும் தோல்வி கண்டோரில் அடங்குவர்.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தனது தொகுதியில் கட்சிக்கு கணிசமான வாக்குகளைப் பெற்றுக் கொடுத்தார்.

பண்டாரநாயக்கா குடும்பத்தவரின் பாரம்பரிய தொகுதியான அத்தனகல தொகுதியை பொ.ஐ.முன்னணி தக்கவைத்துக் கொண்டது. (ஐ-3-5-7-8-10)

## தேர்தல்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோக பூர்வமாக நேற்றுப் பிற்பகல் அனுப்பி வைக்கப்பட்டது. எனினும் உத்தியோக பூர்வ அறிவிப்பு வெளியிடுவதற்காக அதை உறுதிப்படுத்தித் தமக்கு இன்னும் தேர்தல் ஆணையாளர் திருப்பி அனுப்பி வைக்கவில்லை என்றும், இன்று (வியாழக்கிழமை) மாலை 4 மணிக்குப்பின்னர் அது குறித்து பதில்தரப்படும் என்று தேர்தல் ஆணையாளர் தமக்குத் தெரியப்படுத்தி உள்ளார் என்றும் யாழ்.தெரிவத்தாட்சி அலுவலரான அரச அதிபர் க.சண்முகநாதன் நேற்றிரவு குறிப்பிட்டார்.

கண்டியில் பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதை அடுத்து, அந்த மாவட்டத் தேர்தல் குறித்தும் முக்கிய தீர்மானம் எதனையும் ஆணையாளர் இன்று எடுக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

## ஹிஸ்புல்லா தோற்றதால் ஏறாவூரில் கலவரங்கள்

மட்டக்களப்பு,ஒக்.12

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய ஐக்கிய முன்னணி வேட்பாளராகப் போட்டியிட்ட பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தோல்வி அடைந்ததை அடுத்து காத்தான்குடி,ஏறாவூர் பகுதிகளில் முஸ்லிம் சமூகத்தினரிடையே நேற்று மாலை கலவரங்கள் வெடித்தன.

இதனால் இப்பகுதிகளில் பெரும் பதற்றம் ஏற்பட்டதை அடுத்து அங்கு உடனடியாகவே ஊரடங்கு உத்தரவை பொலீஸார் அமுல் செய்தனர். இந்தக்கலவரங்களில் இருவர் சூட்டுக்காயங்களுக்கும் வேறு இருவர் கத்தி வெட்டுக் காயங்களுக்கும் இலக்காகி மட்டக்களப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தப்பகுதிகளில் வசிக்கும் தமிழர்கள் இதனால் பாதிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-21)

## தொகுதி....

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

### கண்டி மாவட்டம்

| | |
|---|---|
| **நாவலப்பிட்டி** | |
| ☆பொ.ஐ.மு. | -30,259 |
| ☆ஐ.தே.க. | -16,089 |
| முஜே.வி.பி. | - 1,668 |
| ☆தே.ஐ.மு. | - 1,388 |
| ☆இ.தொ.கா | - 1,372 |
| ☆சிஹல உறுமய | - 311 |
| ☆புதிய இடதுசாரி மு. | - 437 |
| **தெல்தெனிய** | |
| ☆பொ.ஐ.மு. | - 13,881 |
| ☆ஐ.தே.க. | - 10,373 |
| ☆ஜே.வி.பி. | - 773 |
| ☆புதிய இடதுசாரிமு. | - 209 |
| ☆பிரஜைகள் முன்னணி | - 208 |
| ☆சிஹல உறுமய | - 156 |
| ☆இ.தொ.கா. | - 772 |
| **யட்டிநுவர** | |
| ☆பொ.ஐ.மு. | -21,793 |
| ☆ஐ.தே.க. | -20,405 |
| ☆ஜே.வி.பி. | - 2,082 |
| ☆தே.ஐ.மு. | - 1,341 |
| ☆சிஹல உறுமய | - 1,208 |
| ☆புதிய இடதுசாரி மு. | - 220 |

## ஈ.பி.டி.பி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகமான வாக்குகளைச் சேர்த்தும் ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியை விட 7500 வாக்குகள் அதிகம் பெற்று - முதலாவது இடத்தை சுவீகரித்ததோடு - போனஸாக ஓர் ஆசனத்தையும் பெற்றுக்கொண்டது. (உ-3)

## பயணிகள் கப்பல் இன்று புறப்படும்

திருகோணமலை,ஒக்.12

திருகோணமலையிலிருந்து நானூறு பயணிகளுடன் 'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பல் இன்று பருத்தித்துறை நோக்கிப் புறப்பட விருக்கின்றது.

பருத்தித்துறையில் இருந்து ஒரு தொகுதிப் பயணிகளுடன் இக் கப்பல் நாளை திருமலை திரும்பும். (ஐ-3)

## மக்களுக்கு ஈ.பி.டி.பி.நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.12

யாழ்மாவட்டத்தில் இடம் பெற்ற தேர்தலில் தமது கட்சிக்கு வாக்களித்த வாக்காளர்களுக்கு ஈ.பி.டி.பி. அமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அந்த அமைப்பின் யாழ் மாவட்ட அமைப்பாளருமான வி.கே.ஜெகன் நன்றி தெரிவித்துச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அமைப்பின் செயலாளர் நாயகமான டக்ளஸ் தேவானந்தா சார்பில் அவர் வெளியிட்டுள்ள அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் தேர்தலில் உதவி வழங்கியோருக்கு நன்றி தெரிவிக்கிறோம். எமது பணிகள் தொடரும்.தேர்தல் விஞ்ஞாபனம் மூலம் பொது மக்களுக்கு அளித்த உறுதிமொழியின் பிரகாரம் மக்களுக்கான பணியினைத் தொடர்ந்து மேற்கொள்வோம் என்று உள்ளது. (ஐ-3)


இன்றைய வீடியோ CD வெளியீடு
பிறேம்~குஷ்பு
குரோதம் – 2
(பிரதிகள் உடன் பெறலாம்)
சூர்யா-ஜோதிகா
உயிரிலே கலந்தது
(திரையரங்குக்கு முன்னுரிமை)
பிரமிட் CD வெளியீடு:
* பசும்பொன்
* மூன்றாம்பிறை
* புதியமுகம்
* புதியவார்ப்புகள்
* உயர்ந்த உள்ளம்
* பந்தபாசம்
* இந்திரா
* இணைந்த கைகள்
* பகல் நிலவு
* வெற்றிவிழா
விஷ்ணு வீடியோ
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில்.
(79388)

A/L 2002
பிரிவு - I
வங்கிக்கணக் கிணக்கக்கூற்று
ஆரம்பம்
14.10.2000
சனி 9 மணி
கணக்கீடு D.SAM
DMI யாழ்நகர்
(C/13336)

IBMS இன் 2000/2001 புலமைப்பரிசில் திட்டம்
மேற்படிதிட்டத்தின கீழ் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான விரிவுரைகள் அனைத்தும் 14–10–2000 முதல் ஆரம்பமாகும். இத் திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்டு தமது பதிவினை மேற்கொள்ளத் தவறியவர்கள் 12–10–2000 வரை பதிவினை மேற்கொள் ளலாம்.
IBMS இன் புலமைப்பரிசில் திட்டத்தில் இணையத் தவறியவர்களுக்கான விசேட சலுகை
மேற்படி மாணவர்கள் எமது நிறுவனத்தில் தமது கணனிப் பயிற்சியை மேற்கொள்ள விரும்பின் அவர்களுக்கான விசேட கழிவுக் கட்டண (75%) முறை உருவாக்கப்பட்டுள்ளது. இச் சலுகை எக்கணனிக் கற்கை நெறிக்கும் வழங்கப்படும். மேலதிக விவரங்களுக்கு தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
DIRECTOR
No.701, K.K.S. Road,
Jaffna. (C/13347)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.10.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.